பக்கங்கள்: 16 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 15 ஞாயிற்றுக்கிழமை 28.02.2021 கதிர் 115

இனி இது ரகசியம் அல்ல!

இன்றைய பத்திக்குள் இறங்க முன்னர், வாசகர்களுக்கு ஒரு நகைச்சுவை காட்சி பற்றிய விளக்கம். பெரும்பாலும் எல்லோருக்கும் தெரிந்த பிரசித்தமான 'சீன்' இது. 'காதல் கிறுக்கன்' படத்தில் நடிகர்கள் பார்த்தீபன், வடிவேல் தோன்றும்

பக்கம்02 »

# பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதியையும் தீர்வையும் பெற்றுக்கொடுப்பது சர்வதேசத்தின் பிரதான கடமை

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் சுட்டிக்காட்டு



இலங்கை அரசு பொறுப்புக்கூறும் வகையிலும், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் வகையிலும், போர்க்குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கும் விதத்திலும் ஐ.நாவின் புதிய பிரேரணை அமையப் பெற வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு பொறுப்புக்கூறும் வகையில் பிரேரணையை உறுப்பு நாடுகள் அனைத்தும் ஆதரிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

☞2







# பத்துக் கட்சிக் கூட்டு 'அவுட்!'

## ஆப்பு வைத்தது தமிழரசு மத்தியகுழு

வவுனியா, பெப்ரவரி. 28

தமிழ்த் தேசியக் கட்சிகள் என்று பத்துக் கட்சிகளை ஒன்றிணைத்து புதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கி வழி நடத்த மாவை சேனாதிராசா அணியினர் எடுத்த முயற்சி, அவர் தலைமை வகிக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவின் முடிவால் அடிபட்டுப்போனது.

இந்த எத்தனத்துக்கு ஆப்பு வைத்தது நேற்று வவுனியாவில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு.

☞15

## கச்சதீவில் நேற்று ஆராதனை





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப். 28

பங்குத் தந்தையர், கடற்படையினர் என 70 பேருடன் மட்டும் கச்சதீவில் இலங்கை கடற்படையின் 70 ஆவது ஆண்டு நிறைவின் நன்றி திருப்பலி நேற்று ஒப்புக் கொடுக்கப்பட்டது.

யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் ஜெபரட்ணம், வண. பிதாமார் ஏழு பேர், அருட் சகோதரிகள் மூவர், நெடுந்தீவு பிரதேச செயலாளர், கடற்படையினர் உட்பட 70 பேர் மட்டும் பங்கு கொண்ட நிலையில் அங்கு ஆராதனை இடம்பெற்றது.

# சுற்றுநிரூபம் வெளியிடப்படும் வரை அடக்கம்செய்ய அனுமதிக்க முடியாது

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் விடாப்பிடி



இலங்கையில் கொரோனா மரணிப்பவர்களின் சரீரங்களை அடக்கம் செய்வதற்கு இறுதி சுற்று நிரூபம் வெளியிடப்பட வேண்டும். அதுவரைக்கும் கொரோனா மரணங்களை அடக்கம்செய்ய அனுமதிக்க முடியாது.

இவ்வாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

☞2

# பொத்துவில் - பொலிகண்டி பேரணி ஏற்பாட்டு நோக்கங்களில் சர்வதேச நீதிமன்றப் பொறிமுறை பற்றி குறிப்பிடப்படவில்லை

## விடயத்தை விளக்குகின்றார் சுமந்திரன் எம்.பி.



பொலிகண்டி பேரணியை ஏற்படுத்திய சிவில் அமைப்புக்கள் அது எதற்காக நடத்தப்படுவதாக தெரிவித்து 10 காரணிகளை பலதரப்பிற்கும் அனுப்பியிருந்தன. அந்த கோரிக்கைகளை முன் வைத்தே அது ஆரம்பிக்கப்பட்டது. அதில் சர்வதேச நீதிமன்றப் பொறிமுறை பற்றி எதுவுமே சொல்லப்பட்டிருக்கவில்லை என தமிழரசுகட்சியின் பேச்சாளர் எம்.ஏ .சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழரசுகட்சியின் மத்தியசெயற்குழு கூட்டம் வவுனியா குருமன்காட்டில்

☞2

# '13' கோருவது டில்லியின் வழமையான புலம்பலே!

## அமைச்சர் சரத் வீரசேகர கிண்டல்



அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்துமாறு கோருவது இந்தியாவின் வழமையான புலம்பல். 13ஆவது திருத்தச் சட்டத்தை புதிய அரசமைப்பின் ஊடாக இல்லாதொழிக்க வேண்டும் என்பதே அரசிலுள்ளவர்களில் பெரும்பான்மையானவர்களின் நிலைப்பாடு.

- இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

☞2

## யாழில் 51 கைதிகள் உட்பட

# வடக்கில் நேற்று மட்டும் 61 பேருக்கு கொரோனா

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தில் நேற்று ஒரே நாளில் மேலும் 61 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இவர்களில் 51 பேர் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்று 236 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு

☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

'இங்கு நல்ல மீன்கள் விற்கப்படும்' என்ற அறிவித்தல் பலகை பற்றிய சர்ச்சை.

"இங்கு விற்காமல் வேறு எங்கேயோ விற்கிறாயா?" – என்று பார்த்தீபன் கேட்டதும் 'இங்கு' என்பது அழிக்கப்படும்.

"மற்றவர்கள் எல்லாம் நல்ல மீன் விற்காமல் நாறல் மீனா விற்கின்றார்கள்?" – என்பது பார்த்தீபனின் அடுத்த கேள்வி. அதையடுத்து 'நல்ல' என்று சொல்லும் அழிக்கப்படும்.

"இந்த இடத்தில் மீன் விற்காமல் மானா விற்கின்றார்கள்?" – என்ற அடுத்த கேள்வியை 'அடுத்து மீன்' என்ற சொல்லும் நீக்கப்படும்.

இப்படியே தான் எழுதி வைத்த அறிவித்தலின் முழு வாசகமும் அழிக்கப்பட்ட பின்னர் மீன் விற்கும் வடிவேல் மிலாந்திக்கொண்டு நிற்பார்.

அந்த நிலைமைதான் தமிழ்த் தேசியக் கட்சிகள் என்ற பெயரில் சில, பல உதிரிகளை ஒன்றிணைத்து கொண்டு 'தமிழ்த் தேசியப் பேரவை' என்ற பெயரில் ஒரு கூட்டு அமைக்க முயன்றவர்களின் நிலையும் இன்று.

தமிழரசுக் கட்சியின் நேற்றைய மத்திய குழுக் கூட்டம் சுமுகமாக – பெருங்குழப்பமின்றி – நடக்கும் என நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன். அப்படியே ஆயிற்று. நல்லது.

எனினும், சில தரப்புகளின் மறைமுகக் கரவுத் திட்டத்துக்கு ஆப்பு வைக்க எண்ணியவர்கள் சத்தம் சந்தடியின்றி அதை சாதித்துக் கொண்டனர் போலும்.

பொதுத் தேர்தல் தோல்வியை அடுத்து – கட்சியின் பட்டியலிலேயே ஆறாவது இடத்துக்குத் தள்ளப்பட்டு விட்ட விரக்தியில் இருக்கும் – தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசா எப்படியாயினும் அரசியலில் மீள மேலெழுந்து விடவேண்டும் என்பதற்காகத் தலையால் கிடங்கு கிண்டுகின்றார்.

சர்வதேச மனித உரிமைகள்வாதிகளான நவநீதம்பிள்ளை அம்மையார், ஜஸ்மின் சூக்கா அம்மையார் போன்றவர்களை எல்லாம் உள்ளடக்கிய தமிழர் தேசிய கவுன்ஸில் அமைக்கப் போகிறார் எனத் தொலைக்காட்சி பேட்டியில் அறிவித்து, சம்பந்தப்பட்ட தரப்புகளின் 'பாய்ச்சலை' அடுத்து அடங்கிப்போனார்.

வேறு வேலையின்றி, ஏதோ தான் மட்டும்தான் 'ஒற்றுமையின் காவலர்' என்பது போல, தமிழ்த் தேசியக் கட்சிகள் எல்லாவற்றையும் ஒன்றிணைக்கப் போகின்றவர் மாதிரி பீலா விட்டுக் கொண்டு ஒரு முயற்சியை ஆரம்பித்தார் – அதுவும் தனது கட்சியையே ஒற்றுமைப்படுத்தி வைக்க முடியாத தலைவராக இருந்து கொண்டு.

பத்துத் தமிழ் தேசியக் கட்சிகளின் கூட்டுஎன்றார். புதிய அரசமைப்பு உருவாக்க நிபுணர் குழுவுக்கு ஒற்றுமைப்பட்டு ஒரு யோசனைத்திட்டத்தை சமர்ப்பிக்க அனைத்துத் தமிழ்க் கட்சி குழு என்றார். ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் அமர்வை ஒட்டி சர்வதேசத் தரப்புகளைக் கையாள்வதற்கு பல கட்சியினரையும் சேர்ந்த பொதுவான குழு என்றார். இந்தக் கட்சிகளை எல்லாம் ஒன்றிணைத்து ஒரு கட்டமைப்பாக 'தமிழர் தேசியப் பேரவை' என்று அவர் சார்பில் அறிவிக்கப்பட்டது. அதற்குப் பேச்சாளர்கள் இருவர் நியமிக்கப்பட்டனர் எனப் பெயர்களும் அறிவிக்கப்பட்டன.

தமது தமிழரசுக் கட்சியையும், கூட்டமைப்பையும் கலந்தாலோசிக்காமல் தம்பாட்டில் தமது செம்புகாவிகளுடன் தனி ஆவர்த்தனம் வாசிக்க முயன்ற 'மாவை அண்ட் கோ'வுக்கு சரியான வாய்ப்பூட்டு நேற்றுப் போட்டிருக்கின்றது தமிழரசு மத்திய குழு.

நேற்றைய கூட்டத்தில் 'ஒற்றுமைப்பட்டு செயற்படும் முயற்சி வேண்டாமா?' என்று பெருத்த எடுப்போடுதான் கம்பீரமாக – மாவையர் ஆரம்பித்தார்.

கடைசியில் வடிவேலுவின் மீன் விற்கப்படும் போர்ட் ஒவ்வொரு சொல்லாக அழிக்கப்பட்டமை மாதிரி மாவையரின் திட்டமும் ஒவ்வொன்றாகக் கேட்டுக் கேட்டு அழிக்கப்பட்டன.

★ புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு கூட்டமைப்பு ஒரு யோசனைத் திட்டத்தைத் தயாரித்து சமர்ப்பிக்க, தமிழர் தரப்பின் யோசனைத்திட்டம் என்று வேறு ஒரு முயற்சி எடுக்கப்பட்டது பொய்யா?

★ சர்வதேசத்தைக் கையாள்வதற்கு பொதுவான பிரமுகர்கள் என்று பெயரிட்டு பட்டியல் அறிவித்தது பொய்யா?

★ 'தமிழர் தேசியப் பேரவை' என்று பெயரிட்டு புது அமைப்பு பற்றி அறிவித்தது பொய்யா?

★ அதற்கென பேச்சாளர்கள் இருவரை நியமித்து அறிவித்தமை பொய்யா?

– என்று வரிசையாகக் கேட்கப்பட்டு, வடிவேலுவின் மீன் அறிவித்தல் பலகை முழுமையாக அழிக்கப்பட்டமை போல எல்லாம் பொய் என்ற மாதிரிக் கூறி புதியகட்டமைப்பு என்றபெயரில் அண்மைக் காலத்தில் எடுக்கப்பட்டு, பீலா பண்ணப்பட்ட அனைத்தும் 'செல்லாது, செல்லாது' என்று விவேக் பாணியில் முடிக்கப்பட்டன.

அவ்வப்போது தேவையான விடயங்களுக்கு மட்டும் மற்றைய கட்சிகளுடனும் தமிழர் தரப்புகளுடனும் சேர்ந்து பேசி செயலாற்றுவது, அதைத் தவிர தேர்தல் கூட்டோ, வேறு கட்டமைப்போ எதுவும் இல்லை என்று தீர்மானிக்கப்பட்டது.

ஆக, *"தமிழ்க் கூட்டமைப்பிலிருந்து பிரிந்துசென்றவர்கள் எந்தச் சமயத்திலும் கூட்டமைப்பில் வந்து இணைந்து செயற்படலாம். அவர்களுக்கு கதவு திறந்தே இருக்கின்றது. கூட்டமைப்பை விட்டுத் தம்பாட்டில் பிரிந்தவர்களை ஒன்றிணைத்து அவர்களுடன் சேர்ந்து வேறு புதுக் கூட்டு ஏதும் அமைக்கும் முயற்சி தவறு. அது கூட்டமைப்பின் நியாயப்பாட்டையே கேள்விக்கு உள்ளாக்கி விடும். அந்த முயற்சி கூடாது.!"* – என கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் தொலைபேசி மூலம் விடுத்த உத்தரவை, மத்திய குழு உறுப்பினர்களின் விருப்பமாக – தீர்மானமாக – முடிவு செய்யும் நிலைக்கு கடைசியில் தள்ளப்பட்டிருக்கின்றார் மாவை.

மொத்தத்தில், இன்னொரு கூட்டமைப்பை உருவாக்கி, அதன் மூலம் தம்மை மாகாண முதலமைச்சருக்கான பொது வேட்பாளராக அறிவிக்கச் செய்யும் மாவையரின் பதவிநப்பாசைக்கு நேற்றைய மத்திய குழுக் கூட்டம் ஆப்பு அடித்துவிட்டது என்பது மட்டும் உண்மை.

இந்தக் கூட்டத்தின் போது 'காலைக் கதிர்' நாளிதழைக் காட்டி, ஒரு செய்தியை மறுத்துரைத்தார் மாவையர். அதன் விவரத்தை – உண்மை, பொய்யை – பின்னர் பார்ப்போம்.

–மின்னல்–

## பொத்துவில்-பொலிகண்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்றது. இதன் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறியவை வருமாறு:–

இலங்கை தொடர்பான தீர்மானம் ஜெனிவாவில் நிறைவேற்றப்படுவது குறித்து இன்று பேசினோம். மனித உரிமை பேரவை தனக்கு உரிய அதிகார வரம்புகளை பயன்படுத்தி தமது வார்த்தை பிரயோகங்களிற்கு ஊடாக சில முக்கியமான விடயங்களை இந்தப் பிரேரணை வரைவிற்குள்ளே உள்ளடக்கியிருக்கிறார்கள். இலங்கை தொடர்பான விடயம் சர்வதேச மேற்பார்வையின் கீழே தொடர்ச்சியாக இருக்க வேண்டும். அந்த தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கான செயற்பாடுகளை இணை அனுசரணை நாடுகளுடன் சேர்ந்து எடுத்திருக்கின்றோம்.

இந்த அரசாங்கத்தின் போக்கு தமிழர்களிற்கு எதிராக இருக்கிறது என்பது தெரிந்த விடயம். தற்போது அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் எமது மக்களின் வாழ்க்கையை பாதிக்கின்றன. இருப்பை பாதிக்கின்றன. தொல்லியல் திணைக்களம், வனவளத்திணைக்களம் ஆகியன முன்னெடுக்கும் செயற்பாடுகளை என்ன விதத்தில் எதிர்கொள்ளலாம் என்ற விடயம் தொடர்பாகவும் நாம் கலந்துரையாடியிருந்தோம்.

அத்துடன், உள்ளூராட்சி மன்றங்களில் ஏற்பட்ட பிணக்குகள் தொடர்பாகவும், வரவு செலவுத்திட்டங்களிற்கு எதிராக வாக்களித்த கட்சி உறுப்பினர்களிற்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது சம்பந்தமாகவும் நாங்கள் பேசியிருக்கிறோம். கட்சி பலப்படுத்தப்பட வேண்டிய தேவை இருக்கிறது. அதனை ஆராய்ந்து நடவடிக்கைகளை எடுப்போம்.

புதிய அரசமைப்பு தொடர்பாக ஜனாதிபதியால் உருவாக்கப்பட்ட குழுவிற்கு எமது பிரேரணைகளை முன்வைத்திருந்தோம். அதனடிப்படையில் அவர்களுடன் ஒரு சந்திப்பு இடம்பெற்றிருந்தது. மூன்றாவது குடியரசு அரசமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டுமாக இருந்தால் அது தமிழ் தேசிய பிரச்சினைக்கு முழுமையான தீர்வை உள்ளடக்கியதான வகையில் இருக்க வேண்டியதன் அவசியத்தை சம்பந்தன் ஐயா வலியுறுத்திப் பேசியிருந்தார். இதனால் நன்மை வருமா, இல்லையா என்பது எங்களுக்கு தெரியாது.

பொலிகண்டி பேரணியை ஏற்படுத்திய சிவில் அமைப்புக்கள் அது எதற்காக நடாத்தப்படுவதாக தெரிவித்து 10 காரணிகளை பலதரப்பிற்கும் அனுப்பியிருந்தன். அந்த கோரிக்கைகளை முன்வைத்தே அது ஆரம்பிக்கப்பட்டது. அதிலே சர்வதேச நீதிமன்ற பொறிமுறை பற்றி எதுவுமே சொல்லப்பட்டிருக்கவில்லை. அதனால் நாங்கள் அதற்கு எதிர்ப்பு என்று அர்த்தம் இல்லை. எனவே குறித்த சில காரணங்களை வைத்து ஆதரவை திரட்டி விட்டு, வேறு காரணங்களை சொல்வது நியாயமற்ற விடயம். அதையே நாங்கள் சொல்லியிருந்தோம். உறுப்பு நாடுகளிற்கு நாம் அனுப்பிய கடிதத்திலே இந்த விடயம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றிற்கு பாரப்படுத்தவேண்டும் என்று தெளிவாக சொல்லியிருக்கிறோம். அதற்கு மாறானவர்கள் அல்லர் நாங்கள். – எனத் தெரிவித்தார்.

## '13' கோருவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சரத் வீரசேகர தெரிவித்தார்.

'அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் ஊடாகத் தமிழர்களின் வேணவாக்களுக்குத் தீர்வுகாண தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று இலங்கையைக் கோருகின்றோம். இலங்கை ஒருமைப்பாடு பேணப்பட வேண்டிய அதே நேரத்தில், இலங்கைத் தமிழர்களின் கௌரவம், சம உரிமை என்பவை அங்கீகரிக்கப்பட வேண்டுமென்பதே இந்தியாவின் உறுதியான நிலைப்பாடு' என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத்தொடரில் இலங்கை மீதான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த இந்தியாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி இந்திரா மணி பாண்டே தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் கருத்துரைக்கும் போதே அமைச்சர் சரத் வீரசேகர மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இது இந்தியாவின் வழமையான புலம்பல். 13ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்பது எனது தனிப்பட்ட நிலைப்பாடு. புதிய அரசமைப்பில் அதற்கு முடிவு கட்டப்பட வேண்டும் என்பது அரசிலுள்ளவர்களில் பெரும்பான்மையானவர்களின் நிலைப்பாடு.

புதிய அரசமைப்பின் ஊடாகவே தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு முன்வைக்கப்படும். இலங்கையின் அரசியல் தீர்வு விடயம் தொடர்பிலோ அல்லது நீதிப் பொறிமுறை தொடர்பிலோ வெளிநாடுகள் முடிவு எதனையும் எடுக்க முடியாது. இறைமையுள்ள எமது நாடே அது தொடர்பில் தீர்மானங்களை எடுக்கும். வெளியிலிருந்து இலங்கைக்கு எவரும் அழுத்தங்களை வழங்க முடியாது – என்றார்.

## வடக்கில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உட்படுத்தப்பட்டன. இவர்களில் 52 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதில் 51 பேர் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகள். 150 கைதிகளிடம் நேற்றுமுன்தினம் மாதிரிகள் பெறப்பட்டன. இவர்களிலேயே 51பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

மேலும் சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஆசிரியை ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இவரது கணவர் ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளராகக் கொழும்பில் பணியாற்றுவிட்டு வந்திருந்தார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று முன்னெடுக்கப்பட்ட 463 பேரின் பி.சி.ஆர். பரிசோதனையில் 9 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் தாதி உத்தியோகத்தர் ஒருவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

மேலும், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 3 நோயாளிகளுக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட கொடிகாமத்தைச் சேர்ந்த பெண்ணொருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதேவேளை, மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும், வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 81வயது வயோதிபப் பெண்ணொவருக்கும் அவரது பேரனுக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது – என்றார்

## பாதிக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடர் நடைபெற்று வருகின்றது. இந்த அமர்வில் உரையாற்றிய இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன, இலங்கை தொடர்பான ஆணையாளரின் அறிக்கையை நிராகரித்ததுடன், உறுப்பு நாடுகளும் அதனை நிராகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இவ்வாறானதொருநிலையில் இலங்கை மீது பிரிட்டன் முன்வைக்கவுள்ள பிரேரணையின் நகல் கடந்த சில நாள்களுக்கு முன்னர் வெளியானது. அது காத்திரமானதாக இல்லை என்று தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் விமர்சித்து வந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

போர் முடிந்து 11 ஆண்டுகள் கடந்துவிட்டன. எனவே நீதிக்காகவும், தீர்வுக்காகவும் ஏங்கிக் கொண்டிருக்கும் தமிழர்களுக்கு நீதியையும், தீர்வையும் வழங்குவது ஐ.நா. மனித உரிமை சபை உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் பிரதான கடமையாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, பிரிட்டன் சில நாடுகளுடன் இணைந்து இலங்கை மீது முன்வைக்கவுள்ள பிரேரணையை வலுவாக்கி சமர்ப்பிக்க வேண்டும் எனவும், அதற்கு அனைத்து உறுப்புரிமை நாடுகளும் ஆதரவு வழங்க வேண்டும் எனவும் இரா.சம்பந்தன் மேலும் தெரிவித்துள்ளார்.

## சுற்றுநிரூபம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

இலங்கையில் கொரோனாவால் மரணிப்பவர்களின் சரீரங்களை அடக்கம் செய்ய அனுமதி வழங்கும் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ள போதிலும் அதில் உள்ள துணை உத்தரவுகளின்படி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ஒழுங்கு விதிகளுக்கு அமையவே அடக்கம் செய்யப்பட வேண்டும். இதற்கமைய கொரோனா மரணங்களை அடக்கம் செய்வதற்கான வழிகாட்டுதல்கள் அடங்கிய பூர்வாங்க வரைவைத் தயாரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கூறினார்.

இது குறித்து சம்பந்தப்பட்ட நிபுணர் குழு நேற்றுக் கூடியபோதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

நிலத்தடி நீர்மட்டத்தைக் கருத்தில் கொண்டு அடக்கம் செய்வதற்குப் பொருத்தமான நிலப்பகுதிகள் அடையாளம் காணப்பட வேண்டும். இதன் பின்னரே இறுதிச் சுற்று நிரூபம் வெளியிடப்படும் எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன மேலும் தெரிவித்தார்.

# சொற்ப காலத்தில் மக்களின் வெறுப்புக்கு உள்ளான ஒரே அரசாங்கம் இதுவேதான்!

## மஹிந்தர் முன்னிலையில் நேரடியாகக் கூறிய தேரர்

மிகவும் குறுகிய காலத்தில் மக்களின் வெறுப்புக்கு உள்ளான ஒரே அரசாங்கமாக தற்போதைய அரசாங்கம் மாறியுள்ளதென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கு ஆதரவான பிரபல பிக்கு முருந்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற புத்தக வெளியீட்டு நிகழ்வு ஒன்றில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அருகில் வைத்துக் கொண்டே முருந்தெட்டுவே ஆனந்த தேரர் இவ்வாறு கூறினார்

பிரதமர் அவர்களே! இந்த நாட்டை இவ்வாறு செல்ல அனுமதிக்க முடியாது. நீங்கள் கொஞ்சம் தலையீடு செய்யுங்கள். இன்று நாட்டு மக்கள் உங்களுடன்தான் இருக்கிறார். வேறு யாருடனும் இல்லை. யார் என்ன சொன்னாலும் மக்கள் உங்களுடனே இருக்கிறார்கள்.



மஹிந்த இல்லா நாடு எமக்கு வேண்டாம் என மக்கள் கூறுகின்றனர்.

பிரதமர் பஸ்ஸில் இருந்து இறங்கியுள்ளார் எனச் சிலர் கூறுகின்றனர். மீண்டும் உங்களை பஸ்ஸில் ஏற்றிச் செல்வோம். ஜனாதிபதி கோட்டாபய அதற்கு ஒரு போதும் எதிர்ப்பு தெரிவிக்க மாட்டார். எமக்கு தேவை உள்ளது.

குறுகிய காலத்தில் நாட்டு மக்கள் வெறுத்த அரசாங்கம் இது என்றால் யாரும் கோபப்படுவதற்கு இல்லை. இந்த அரசாங்கத்தை உருவாக்கக் கஷ்டப்பட்ட எங்களுக்கு அப்படியான வார்த்தைகளைக் கேட்க விருப்பமில்லை. நாட்டில் உருவான சிறந்த அரசாங்கம் கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் என்று சொல்வதைக் கேட்கவே எமக்கு விருப்பம் என்று முருந்தெட்டுவே ஆனந்த தேரர் அங்கு தெரிவித்தார்.

# புதிய அரசமைப்பு வரைவு இப்போதைக்கு வராதாம்!

## ஜூன் மாதத்துக்குப் பின்னரே

கொழும்பு,பெப்.27

புதிய அரசமைப்புக்கான ஆரம்பக்கட்ட வரைவு நகல் அடுத்த மாதம் வெளிவரும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தாலும், எதிர்வரும் ஜூன் மாதத்துக்குப் பின்னரே அது வெளிவரும் என்று நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இது தொடர்பில் புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நிபுணர் குழுவின் உறுப்பினரான கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸிடம் வினவிய போது, புதிய அரசமைப்புக்கான ஆரம்பக்கட்ட வரைவு நகல் அடுத்த மாதம் வெளிவராது என்பதை மட்டும் இப்போதைக்குக் கூற முடியும் என்று பதிலளித்தார்.

புதிய அரசமைப்புக்கான யோசனைகள் அடங்கிய வரைவு நகலை முன்வைப்பதற்காக அரசால் ஜனாதிபதி சட்டத்தரணி றொமேஷ் டி சில்வா தலைமையில் 9 பேரடங்கிய நிபுணர்கள் குழுவொன்று அமைக்கப்பட்டது. அந்த நிபுணர் குழு நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள் மற்றும் பொது மக்கள் உட்பட அனைத்துத் தரப்பினரிடமும் மின்னஞ்சல் மற்றும் பதிவுத்தபால் மூலம் கருத்துக்களைப் பெற்றுக்கொண்டது. பல தரப்பினரும் யோசனைகளை முன்வைத்திருந்தனர்.

தற்போது அரசியல் கட்சிகளால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் தொடர்பில் அந்தக் கட்சிகளின் பிரதிநிதிகளுடன், நிபுணர்கள் குழு கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றது. மேலதிக விளக்கங்களைப் பெறுவதுடன், ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றது.

இந்தக் குழு முக்கியமான சில சிவில் அமைப்புகளையும் நிபுணர்கள் குழுக்களையும் சந்திக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுவதால், அத்தகைய சந்திப்புக்கள் எல்லாம் நிறைவடைந்த பின்னரே நிபுணர்கள் குழுவால், புதிய அரசமைப்புக்கான ஆரம்பக்கட்ட வரைவு நகல் முன்வைக்கப்படும் என்று அறியமுடிகின்றது.

நிபுணர்கள் குழுவுக்கு ஆறு மாத காலமே அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அந்தக் கால எல்லை மேலும் சில மாதங்களுக்கு நீடிக்கப்படலாம் எனவும், ஜூன் மாதமளவிலேயே ஆரம்ப வரைவு நகல் கையளிக்கப்படும் எனவும் அறியமுடிகின்றது.

அதேவேளை, டிசெம்பர் மாதத்துக்குள் புதிய அரச மைப்பை நிறைவேற்றிக்கொள்வதற்கு அரசு உத்தேசித்துள்ளது என்றும் கூறப்பட்டது.

# செவ்வாயின் ‘ஜெஸீரோ’ பள்ளத்தின் துல்லிய படக்காட்சிகள் வெளியாகின





கா.குமாரதாஸன் (பாரிஸ்)

செவ்வாயில் இறங்கிய நாஸா ஹெலி ஏராளமான செல்ஃபிகளை அனுப்பி வருகின்றது. அங்கு மாலைச் சூரியனின் காட்சி உட்பட செவ்வாயின் மர்மங்கள் நிறைந்த ஜெஸீரோ பள்ளத்தின் (Jezero crater) துல்லியமான (high - definition) அகலப் படங்களை நாஸா விஞ்ஞானிகள் பெற்றுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

புத்திக் கூர்மை புகுத்தப்பட்ட மினி ஹெலி அதன் நுண்ணிய சூம் கமராக்கள் (zoomable cameras) மூலமாக 142 தனித் தனி படங்களை உள்ளடக்கிய 360 பாகை ‘பனோரமா’ (360-degree panorama) அகலப்படக் காட்சி ஒன்றைப் பூமிக்கு அனுப்பி வைத்துள்ளது.

ஜெஸீரோ பள்ளம் (Jezero crater) என்று அழைக்கப்படுகின்ற பகுதி நீண்ட ஆறு அல்லது நீர் நிலை காரணமாக உருவாகிய தரைத் தோற்றம் ஆகும். சுமார் ஐம்பது மீற்றர் நீளமான களிமண் படைகள் கொண்ட ஆற்றுப் பள்ளத்தாக்கு போன்ற அமைப்பில் அது தென்படுகிறது. செவ்வாயின் இந்தப் பகுதி முதலில் கண்டறியப்பட்ட போது அதற்கு 'Jezero' என்று பெயரிடப்பட்டது. Jezero என் பது பொஸ்னிய மொழிகளில் நீரேரியைக் குறிக்கிறது.

செவ்வாய் தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட்டுவருகின்ற அறிவியலாளர்கள் அந்த நிலப்பகுதியில் உயிரினங்கள் வாழ்ந்ததற்கான தடயங்களைக் கொண்டிருக்கலாம் என்று நம்புகின்றனர் பல நூறு கோடி வருடங்களுக்கு முன்னர் (350 கோடி) அந்தப் பகுதியில் நீர் நிலை ஒன்று இருந்திருப்பதற் கான சாத்தியங்களை அங்கு இதுவரை எடுக்கப்பட்ட படங்கள் உறுதிப்படுத்தி உள்ளன.

நாஸாவின் Perseverance ரோவர் விண்கலம் அந்த ஜெஸீரோ பள்ளம் அமைந்திருக்கின்ற பகுதியிலேயே தரையிறக்கப்பட்டுள்ளது. பள்ளத்தில் உள்ள கற்பாறைகளையும் தரைப்பகுதி களையும் துளையிட்டு மண் மாதிரிகளைச் சேகரித்துப் பேணும் பணியை நாஸா விண்கலம் அங்கு மேற்கொள்ளவுள்ளது. பங்கஸ், பக்றீயாக்கள் போன்ற ஏதேனும் நுண் உயிரிகளது உயிர்த் தடயங்களைத் தேடிப்பிடிப்பதே இதன் நோக்கம் ஆகும்.

படங்கள் :1ஜெஸீரோ பள்ளத்தாக்கு.

2 செவ்வாயில் மாலைநேர சூரியன். (NASA டுவிட்டர்.)




கசக்கி பிழியப்பட்ட பழங்களே சுவையான பானங்களாகின்றன.புளிக்க வைக்கப்பட்ட மாவிலே தான் சுவையான தீன் பண்டங்கள் தயாரிக்கப்படுகின்றன.பதப்படுத்தப்பட்ட களிமண்ணே பயன்பாட்டுக்குதவும் பாண்டங்களாக உருவாக்கப்படுகின்றன.இவை இயற்கை வாழ்வின் பாடங்களாக இருக்கின்றன.கஷ்டத்தை அனுபவித்தவனே வாழ்வின் உயர்நிலை அடைகின்றான். கடுமையான முயற்சியும் பயிற்சியும் மேற்கொண்டவர்களே அவ்வத் துறைகளிலே நட்சத்திரங்களாக மிளிர்கின்றார்கள்.தியாகங்களே செயற்கரிய செய்கின்றன..

இயேசுவும் எம்மை எவ்வாறு அன்பு செய்தார் என்றால் பாவமற்ற அவர் எமக்காகப் பாவங்களைச் சுமந்து தீர்த்தார். ஏனென்றால் மனிதன் பாவத்திலே வீழ்ந்து விட்டான் என்று அவனை அப்படியே விட்டு விடாமல் அடிமையின் தன்மை பூண்டு மனிதனுக்கு ஒப்பானார் மனிதனை உணர வைக்க மனித துன்பங்களுக்கு உட்பட்டார் பகிரங்கப்பணி வாழ்வின் போது பசி, துன்பத்தை, புறக்கணிப்பை, பகைமையை, இயலாமையை எதிர்ப்புக்களையெல்லாம் சந்தித்தார்.ஏனென்றால் தமது சீடர்களுக்கும் இவ்வாறன நிலைமைகள் உருவாகும். அவர்களும் துணிவோடு தமது பணியைத் தமக்குப் பின் அவர்கள் மேற்கொள்ள அவர்களை துன்பங்கள் வழியாகவே பக்குவப்படுத்தி பயிற்சிகளை அவர்கள் மேற்கொள்ள அவர்களுக்கு துணிவைக் கொடுத்தார் இயேசு.

இயேசு தமது பணியின் இறுதிக்காலத்தில் தமமு அன்பு சீடர்கள் மூவரை அழைத்துக் கொண்டு உயர்ந்த மலையிலே தோற்றம் மாறினார். அவ்வேளை சீடர்கள் அவரின் இறை பிரசன்னத்தின் பிரம்மித்துப் போனார்கள்.இயேசு இப்படியான பிரசன்னம் காண மனுமகன் பாடுகள் பட்டு, இறந்து உயிர்த்தெழ வேண்டும் என்பதை அவர்களுக்கு உரைத்து இறை அன்பின் மாட்சியை அவர்கள் கண்டு கொள்ளச் செய்தார் என்பதை வேதம் கூறுகின்றது. இயேசு கூறிய வார்த்தையின் படியே இயேசு பாடுகள் பாட்டு இறந்து உயிரத்து சீடர்களுக்கு காட்சி கொடுத்த பின்பே சீடர்களும் இயேசுவிலே அவரின் வார்த்தையை, முழுமையாக ஏற்று தம் உயிர்களையே இயேசுவுக்காகக் கொடுத்து வேதத்துக்கே சாட்சிகளானார்கள்.துன்பங்களும் துயரங்களும் எதிர்ப்புக்களும் அவர்களை இறை அன்பினால் புடமிடப்பட்டு இன்றும் புனிதர்கள் என்று உயர்த்தப்படுகிறார்கள். இவையெல்லாம் மனித செயல்கள் மட்டுமல்ல இறை அன்பின் ஆட்கொள்கைகளுமேயாகும்.

இத்தனை அற்புதங்கள், அடையாளங்கள் இறையருளின் செயல்கள் வெளிப்பட்ட போதும் மனிதன் சாத்தானின் சதி வலைக்குள்ளே அகப்பட்டுக்கொள்பனாகவே மாறிவிடுகின்றான். இறைவன் தன் அன்பை உணர வைக்கும் செயல்களாகவே இயற்கை அழிவுகளும் கொடிய வாதை நோய்களும் நோக்கப்பட வேண்டும். மனிதன் உணர்ந்திட மனமாற்றம் பெற்றிட தரப்படும் சந்தர்ப்பங்களை இறைவார்த்தையின் ஒளியிலே உற்று நோக்கினால் கண்டு கொள்ளலாம். காலத்தின் அறிகுறிகளை உணர்ந்தவர்களாக பாகுபாடற்ற அன்பினால், எல்லோரையும் ஏற்று வாழும் பொழுது இறைவனின் கருணையும் அன்பும் எம்மேல் பொழியப்படும். தவக்காலச் செய்தியும் செயல்களும் எம்மை இறைவனுடன் அயலவர்கள் பகைவர்களுடனும் ஒப்புரவாக எம்மை அழைத்திடும் குரலினைப் பின்தொடந்து இறை அன்பின் ஆழத்தினை உணர்ந்து செயற்பட எம்மை மாற்றிக் கொள்வோம்.

காலைக்கதிர் Kalaikkathir


# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## இலங்கையின் தலையெழுத்து

**'நாயின் வேலையை நாய் பார்க்க வேண்டும். கழுதையின் வேலை யைக் கழுதை பார்க்க வேண்டும்' – என்பார்கள்.**

**மாறிக் காரியமற்ற முயன்றால் – நாயின் வேலையைக் கழுதையோ, கழுதையின் வேலையை நாயோ பாரக்க முயற்சித்தால் – சிக்கல்தான்.**

**இது வீட்டு வேலைகளுக்கு மட்டுமல்ல, நாட்டு வேலைகளுக்கும் பொருந்தும்.**

**சிவில் நிர்வாகிகள், இராஜதந்திரிகள் பணிபுரிய வேண்டிய உயர் பதவிகளில் எல்லாம் படை அதிகாரிகளைக் கொண்டு வந்து நியமித்திருக்கின்றார் நாட்டின் அதி உத்தமர் கோட்டாபய ராஜபக்ஷ.**

**இராணுவ அதிகாரியை நாட்டின் ஜனாதிபதியாக்கியதன் விளைவை நாடும் மக்களும் சந்தித்துத்தானேயாக வேண்டும்?**

**அதுபோல, சிவில் அதிகாரிகள், இராஜதந்திரிகள் பதவிக்கு முன்னாள் படை அதிகாரிகளை நியமித்ததன் விளைவையும் நாடு எதிர்கொண்டுதானாக வேண்டும்!**

**காவல்கார நாயின் குரைக்கும் வேலையை கழுதை பொறுப்பெடுத்து, கழுதை 'காள்' 'காள்' என்று கர்ண கொடூரமாய்க் கத்திக் காதைப் பிளந்தால் யார்தான் தாங்குவர்? பொறுக்க முடியாமல் அடித்துத் தானே தூத்துவர்...!**

**வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பதவி என்பது முக்கிய இராஜதந்திர பொறுப்பு. சாணக்கிய தந்திரம் தேவைப்படுவது. அதற்குத் தேவையானது யுத்தத்தில் பயன்படுத்தும் வீர தந்திரோபாயம் அல்ல.**

**படைக் கையாள்கை வேறு; வெளிவிவகார இராஜதந்திரம் வேறு.**

**ஜெனிவா நெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் இலங்கை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அங்கத்துவ நாடுகளின் ஆதரவை ஆதங்கத்தோடு வேண்டி நிற்கின்றது. தேடியலைகின்றது.**

**அதுவும் அயலில் உள்ள தேசங்களின் – குறிப்பாக இந்தியா போன்ற நாடுகளின் – ஆதரவும் ஒத்துழைப்பும் இலங்கைக்கு மிக மிக அவசியமாகும்.**

**'அவலை நினைத்துக் கொண்டு உரலை இடித்த' கதையாக இந்தியாவின் ஆதரவைக் கோரும் வகையில் இந்தியாவின் முக்கிய நாளிதழான 'த ஹிண்டு' பத்திரிகைக்கு பேட்டியளித்துள்ள இலங்கையின் வெளிவிவகாரச் செயலாளரான முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ஜெயநாத் கொலம்பகே இறுதியில் தேவையில்லாமல் இந்தியாவைச் சீண்டும் வேலையைப் பார்த்திருக்கின்றார்.**

**கடைசியாகக் குளிக்கப் போய், சேறு பூசிய கதையாக அவரின் முயற்சி முடிந்திருக்கின்றது.**

**இந்த இக்கட்டுச் சமயத்தில், இந்தியாவுடன் சேர்ந்து, ஒடி, சாணக்கியமாகக் காய்களை நகர்த்தி, விடயத்தை வெல்வதை விடுத்து, வெளிவிவகார இராஜதந்திரம் என்பது பீரங்கி வைத்து முழங்கி எதிர்த்தரப்பை பணிய வைப்பது என்ற பாணியில் அவர் செயற்பட்டிருக்கின்றார்.**

**ஜெனிவாவில் இலங்கை தொடர்பான விவகாரத்தில் உரையாற்றிய இந்தியப் பிரதிநிதி தங்கள் நிலைப்பாட்டை ஓரிரு வாசகங்களில் குறிப்பிடக் கூடியதாக தெட்டத் தெளிவாக எடுத்துரைத்து விட்டார்.**

**இலங்கையில் தமிழர்களின் நீதி, நியாயமான அபிலாஷைகளை – 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டவை உள்ளடங்கலான அதிகாரப் பரவலாக்கலை – கொழும்பு ஆட்சிப் பீடம் வழங்க வேண்டும். அந்த அடிப்படையில் இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாடு மற்றும் இறைமையை இந்தியா ஆதரித்து உறுதிப்படுத்தும்.**

**– இதுவே தனது நிலைப்பாடு என்பதை இந்தியா ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை என்ற சர்வதேச அரங்கில் வைத்து அறிவித்த பின்னரும், இந்திய இராஜதந்திரத்தை வேறு விதமாகச் சீண்டுகின்றார் இலங்கை வெளிவிவகாரச் செயலாளர்.**

**1987 இல் செய்து கொள்ளப்பட்ட இலங்கை – இந்திய ஒப்பந்தத்துக்கு அமைய, அந்த இணக்கப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காகவே செயற்பட்டது அரசமைப்புக்கான 13ஆவது திருத்தம். அதை முழுமையாக நடைமுறைப்படுத்தக் கோருகின்றது இந்தியா. இலங்கையுடனான உறவு – ஊடாட்டம் – இரண்டு தூண்களில் தங்கியுள்ளதாக் கூறும் புதுடில்லி, அதில் ஒன்று 13ஆவது திருத்தம் உள்ளடங்கலாக அதிகாரப் பகிர்வை முழு அளவில் வழங்குவதன் மூலம் தமிழர்களின் நீதி, நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்வது என்று சுட்டியுள்ளது. அந்தக் கடப்பாட்டை நிறைவு செய்தால்தான் இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாடு மற்றும் இறைமையை மதித்தல் என்ற மற்றைய தூண் பலமாக நிற்கும் என்ற புதுடில்லியின் கருத்துரையை நிராகரிக்கும் விதத்தில் கருத்து வெளியிடுகின்றார் கொலம்பகே.**

***"1987இன் செயற்பாடு முறைமைகள் மாறிவிட்டன. காலம் ஓடிவிட்டது; நிலைமைகள் மாறிவிட்டன. அந்தக் கால ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும்படி இந்தியா சதா அரித்துக் கொண்டிருக்கக் கூடாது. தமிழர் தரப்பு சமஷ்டி என்கிறது. அதன் கீழ் காணி, பொலிஸ் அதிகாரம் வேண்டும் என்கின்றார்கள். அப்படிக் கேட்டால் அது என்ன? தனி நாடுதானே?"*** **– என்று இராஜதந்திரமே தெரியாமல் வாயைப் பிளக்கின்றார் ஜெயநாத் கொலம்பகே.**

**நாயின் வேலையைக் கழுதை பார்த்தால் இப்படித்தான் இராஜ தந்திரமற்ற வார்த்தைகள் கொட்டும். இது இலங்கையின் தலை எழுத்து...!**

# ஈஸ்டர் குண்டும் தாக்குதல் விசாரணை அறிக்கை அரசியல் கட்சி ஒன்றின் கொள்கைப் பிரகடனம்!

## ரணில் விக்கிரமசிங்க கிண்டல்



2019 ஏப்ரல் மாதம் இலங்கையில் இடம்பெற்ற ஈஸ்டர் தின தாக்குதல் தொடர்பான எவ்வித உண்மையான விடயங்களையும் குறிப்பிடாது வெறுமனே ஒரு நாடு , ஒரு சட்டம் என்ற பரிந்துரைகளை முன்வைத்து அரசியல் கட்சியொன்றின் கொள்கை பிரகடனமாக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கை அமைந்துள்ளது என ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சம்பவம் இடம்பெற்ற தினத்தன்று முழு பாதுகாப்பு கட்டமைப்பையும் நெறிப்படுத்தி அடுத்த தாக்குதலொன்று இடம்பெறாதவாறு முன்னெடுக்கப்பட்ட எந்தவொரு நடவடிக்கையும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் உள்ளடக்கப்படவில்லை. இது ஒரு பெரும் குறைபாடாக தான் கருதுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு - 03 ஐந்தாம் ஒழுங்கையில் அமைந்துள்ள ஐ.தே.க.வின் தலைவரின் இல்லத்தில் கட்சி உறுப்பினர்களுக்கும் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் நேற்று வியாழக்கிழமை கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு மேலும் குறிப்பிடுகையில் -

ஒரு நாடு ஒரு சட்டம் என்ற கொள்கையை நடைமுறைப்படுத்துவதனால் அரசமைப்பில் காணப்படுகின்ற சிறப்புரிமைகளை இரத்து செய்ய ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை பரிந்துரைத்துள்ளதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. ஆணைக்குழு அறிக்கை பரிந்துரைப்பது போன்று இன ரீதியாக காணிகளை பிரிப்பதென்பது சாத்தியப்படக் கூடிய விடயமா? இதேபோன்று மறைக்கல்வி நிலையங்களை கண்காணிப்பதற்கான யோசனையின் நோக்கம் பௌத்த விவகாரங்களுக்கான ஆணையாளர் பதவியை இரத்து செய்வதற்காகவா என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் தாக்குதல் ஒன்று இடம்பெறலாம் என்று 2019 ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி இடம்பெற்ற பாதுகாப்புசபை கூட்டம் குறித்து எவ்வித விடயங்களும் அறிக்கையில் காணப்படவில்லை. அனைத்து இராணுவ அதிகாரிகள், புலனாய்வு திணைக்கள உயர்மட்ட அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு தொடர்பான உயர் நிலை அதிகாரிகள் கலந்து கொண்ட அந்த கூட்டத்தில் வெளிப்படுத்தாத விடயங்கள் பின்னர் பேசப்பட்டிருக்கலாம் என சிந்திக்க முடியாது.

ஆகவே உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கை புதிய விடயங்கள் எதனையும் குறிப்பிடவில்லை. மாறாக ஒரு அரசியல் கட்சியின் கொள்கை பிரகடனமாகவே காணப்படுகிறது.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 9 ஆம் திகதி இடம்பெற்ற பாதுகாப்பு சபை கூட்டத்தில் தாக்குதல் தொடர்பில் தகவல்கள் வெளியிடப்பட்டிருந்தால் முஸ்லிம் அமைச்சர்களை அழைத்து எவ்விதமான சம்பவங்கள் இடம்பெற்றாலும் அதன் பொறுப்பை ஏற்க வேண்டும் என எமக்கு அறிவித்திருக்க முடியும்.

அதே போன்று அந்த சந்தர்ப்பத்தில் தாக்குதல் தொடர்பான தகவலை யார் அறிந்திருந்தார்கள் என்பதையும் அறிந்திருக்க முடியும். முதலாவது தாக்குதல் இடம்பெற்று குறுகிய நேரத்துக்குள் பிரதமர் என்ற வகையில் நான் பல வந்தமாக பாதுகாப்பு அமைச்சிற்கு சென்று அனைத்து பாதுகாப்பு அதிகாரிகளையும் அழைத்து அடுத்த தாக்குதல் இடம்பெறாதவாறு நடவடிக்கை எடுத்தாகவும் அவர் குறிப்பிட்டார்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அறிக்கை; நிராகரிக்க சுதந்திரக் கட்சி தீர்மானம்!

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை நிராகரிப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்து ஆராய ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சட்டத்தரணிகள் குழாம் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களின் அறிக்கை கையளிக்கப்பட்டதும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினால் உத்தியோகபூர்வ அறிவிப்பு விடப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தெரிவிக்கின்றது.

ஈஸ்டர் தாக்குதல் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை நேற்று முன்தினம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் இந்த தாக்குதலுக்கு பொறுப்பு கூற வேண்டியவர்களின் பட்டியலில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு எதிராக குற்றவியல் நடவடிக்கையை எடுக்குமாறு பரிந்துரைத்துள்ளது.

இது குறித்து ஆராயவும் விதமாகவும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தீர்மானிக்கவும் ஸ்ரீலங்கா சுதந்திரகட்சியின்மத்தியசெயற் குழு நேற்று பிற்பகல் கூடியது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கூடிய இந்த கூட்டத்தில், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை நிராகரிப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மத்திய செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## யாழ். போதனா வைத்தியசாலையில்

# நோயாளர்களைப் பார்வையிட ஒருவருக்கு மட்டுமே அனுமதி!

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்களைப் பார்வையிட நேற்றிலிருந்து ஒருவருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும் என யாழ். போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்தியர் சண்முகநாதன் ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்துள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் கூறுகையில் -

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையானது வடக்கு மாகாணத்தில் உள்ள நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதில் பெரும் பங்காற்றுகிறது. இந்நிலையில், கடந்த வாரம் ஏற்பட்ட சில தடங்கல் நிலை காரணமாக எமது வைத்திய சேவைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. அண்மையில், வைத்தியசாலை உத்தியோ கத்தர்கள் மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டதன் காரணமாக வைத்திய சாலையில் சில பிரிவுகள் மூடப்பட்டதோடு தனிமைப்படுத்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில், இந்த நிலைமை விரைவில் சீராக்கப்பட்டு எதிர்வரும் ஐந்தாம் திகதியிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலையின் வழமையான செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்நிலையில், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களைப் பார்வையிட ஒருவர் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என அவர் கூறியுள்ளளார்.



## விடைபெற்ற தோழர் தா. பாண்டியன்

# ஈழத்தமிழருக்கு ஆதரவாகவும் அடக்குமுறைக்கு எதிராகவும் ஒலித்த குரல் ஓய்ந்தது!

● முருகபூபதி

சென்னை ராஜீவ்காந்தி மருத்துவமனையில் நேற்று முன்தினம் 26 ஆம் திகதி உடல் நலக்குறைவால் மறைந்துவிட்ட தோழர் தா.பாண்டியன் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் – அதாவது 1991 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதியே இறந்திருக்கவேண்டியவர்!

இதனை வாசிக்கும் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறதா..?

அந்தத் திகதியை எவரும், ஏன் முழு உலகமுமே மறந்திருக்காது.

அந்த நாள் எத்தகையது என்பதை தா.பாண்டியனின் வாக்குமூலத்திலிருந்தே இங்கே தருகின்றேன். அந்த வாக்குமூலத்தை அவர் தமது 69 வயதில்தான் பதிவுசெய்துள்ளார்.

'பிறந்த நாளைப் பலர் மறக்காமல் கொண்டாடிவருகிறார்கள். நான் என் பிறந்த நாளை, நான் கடந்துவிட்ட 69 ஆண்டுகளில் ஒரே ஒரு முறைதான் கொண்டாட நேரிட்டது. பிறந்தநாளையே நினைக்காதிருந்த எனக்கு அதை 1992 இல் கொண்டாடவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் என் மனைவி,குழந்தைகளிடமிருந்து வந்தது.

1991 மே, 21 ஆம் நாளன்று சென்னையை அடுத்துள்ள திருப்பெரும்புதூரில், தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திற்காக வந்த ராஜீவ்காந்தி மனித வெடிகுண்டு மூலம் கொல்லப்பட்டார். அன்று அந்த இடத்தில் அவர் அருகில் இருந்தவன் நான். மூன்றடி தூரத்திற்குள் நின்று இருந்த நானும், குண்டுகள் பட்டுக் காயமடைந்தேன். வெடித்த வேகத்தில் தூக்கி எறியப்பட்டேன். இறந்து போனதாகவே அறிவிக்கப்பட்டேன். சில பத்திரிகைகளில் இறந்தோர் பட்டியலில் என் பெயரும் இருந்தது. அன்று இரவு முழுவதும் என் குடும்பத்தார்க்கும் நான் கொல்லப்பட்ட ஒருவன்தான். ஏனெனில் அதுதான் அவர்களுக்கு தரப்பட்ட செய்தி.

இருந்தும் உயிர்தப்பி வாழ்கிறேன்… எப்படித் தப்பினேன்..? என்பதை இன்றும் என்னால் தெளிவாகக் கூற முடியவில்லை. ஏனெனில், எனக்கு வலதுபுறம் இருந்தவரும் கொல்லப்பட்டார்… இடதுபுறம் நின்றவரும் வீழ்ந்தார். எனக்குப்பின்னிருந்த ஏழெட்டுப்பேர் ரத்த வெள்ளத்தில் துண்டிக்கப்பட்டுக்கிடந்ததையும் கண்டேன். என்னைச்சுற்றிலும் குண்டு விபத்துக்குப் பலியாகி மடிந்தவர்கள் பதினெட்டுப் பேர். ராஜீவ்காந்தியுடன் பத்தொன்பது பேர். ஒரு நொடியில், ஒரே இடத்தில் களப்பலியாயினர்.

இவர்கள் மத்தியில் நின்ற நான், அதுவும் ராஜீவ்காந்தியின் அருகில் நின்று மொழிபெயர்த்துக்கொண்டிருந்த நான் குண்டின் குறிக்கு எப்படித் தப்பினேன் ?…. இன்றும் புரியாத புதிராகவே இருக்கிறது.

ஆனால், பதிந்த குண்டுகள், இரும்புத் துகள்கள், ஆணிகள் என் உடம்பில் இன்றும் இருந்து அந்த நாளை நினவுபடுத்திக்கொண்டே இருக்கின்றன.

வலதுகை விரல்கள் சிகிச்சைக்குப் பிறகும் சரியாக வில்லை. அதனால் உணவருந்தும்போதும், எழுதும் போதும், தலைவாரும்போதும், வலது கையை பார்க்குந்தோறும், அவை அந்தச் சோக நிகழ்ச்சியை நினைவுபடுத்திக்கொண்டே இருக்கின்றன.

எனவே, அதை நான் மறுபிறவி எடுத்த நாளாக என் குடும்பத்தினர் கருதியதில் வியப்பில்லை.

எனவேதான், 1992 மே 18 ஆம் நாள் மட்டும் 60 ஆவது பிறந்தநாளை யாருக்கும் தெரிவிக்காமல் எங்கள் ஊரிலுள்ள தோட்டத்தில் கொண்டாடப்போனோம். பிறந்த நாள் மே 18. – மறுபிறவிகொண்ட நாள்மே 21. இப்போது மே 21 தான் நினைவில் நிற்கிறது.'

–மேற்கண்ட வாக்குமூலத்திற்கு தோழர் பாண்டியன் 'இரத்த சாட்சி' என்று தலைப்பிட்டிருந்தார். இந்த அத்தியாயத்துடன் அவர் தொடங்கி எழுதிய நூல்தான்: ராஜீவ் காந்தியின் கடைசி மணித்துளிகள்'. 2005 ஆம் ஆண்டு வெளியானது.

அதாவது,2002 ஆம் ஆண்டு ஏப்ரல் 10 ஆம் திகதி கிளிநொச்சியில் இலங்கை – இந்தியா உட்பட சர்வதேச நாடுகளின் பத்திரிகையாளர்களை விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் சந்தித்த போது, 'ராஜீவ் காந்தியின் கொலை என்றோ நடந்த ஒரு துன்பியல் நிகழ்ச்சி' என்று வாக்குமூலம் அளித்த பின்னர் வெளியான நூல்.

ராஜீவ் காந்தியுடன் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர்போயிருக்கவேண்டியவர், பாரதிசொன்னதுபோன்று,



'வீழ்வேனென்று நினைத்தாயோ… ' என்ற ஓர்மத்துடன், குண்டுத்துகள்களை சுமந்தவாறு, மூன்றுதசாப்தகாலம் அரசியல் பணிகளையும் எழுத்துப்பணியையும் அயராமல் தொடர்ந்து மேற்கொண்டு, இறுதியில் சக்கரநாற்காலியிலும் வலம் வந்து சிம்மக்குரலோடு ஒலித்தவர், நேற்று முன்தினம் ராஜீவ் காந்தி மருத்துவமனையிலே தமது இறுதி மூச்சை விட்டுள்ளார்.

இலங்கையோடு நெருக்கமான தொடர்பிலிருந்த தமிழக இடதுசாரித் தலைவர்களில் ஒருவர்தான் தோழர் தா.பாண்டியன். இலங்கையில் இந்திய வம்சாவளி மக்களுக்காக – குறிப்பாக மலையக மக்களுக்காக – தொழிலாளர் காங்கிரஸ் உருவாவதற்கு அன்றைய பாரதப்பிரதமர் ஜவகர்லால் நேரு பிரதானியாக இருந்தமைபோன்று, இலங்கையில் முற்போக்கு சிந்தனை மிக்க தமிழர்கள், இடதுசாரி கருத்தியல்களை உள்வாங்கிக்கொள்வதற்கு தமிழ்நாட்டிலிருந்து தலைமறைவு வாழ்க்கை வாழ்வதற்கு இலங்கை வந்த தோழர் ஜீவானந்தமும் காரணமாக இருந்தார்.

அவரது தோழமையின் ஆதர்சம்தான், டொமினிக் என்ற பெயருடன் நடமாடியவரை டொமினிக்ஜீவா எனப்புகழ் பெறவைத்தது.

தோழர் ஜீவாவைத்தொடர்ந்து, பின்னாளில் இலங்கைக்கு வந்தவர்கள் தோழர்கள் எம். கல்யாணசுந்தரம், தா. பாண்டியன், மகேந்திரன். இவர்கள் மூவரும் 1978 ஆம் ஆண்டிற்குப் பின்னர் அடுத்தடுத்து இலங்கை வந்தனர்.

இவர்கள் மூவரும் தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சி





யின் உத்தியோகபூர்வ ஏடான ஜனசக்தியில் காலத்துக்கு காலம் ஆசிரியர்களாகவும் பணியாற்றினர்.

1982 ஆம் ஆண்டு பாரதி நூற்றாண்டுகாலத்தில் இலங்கை வந்திருந்த தோழர் தா. பாண்டியன், கொழும்பில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடந்த பாரதி விழாவிலும் உரையாற்றினார். எமது முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் இலக்கிய ஆர்வலர் ரங்கநாதன் இல்லத்தில் நடைபெற்ற தேனீர் விருந்துபசார இலக்கிய சந்திப்பிலும் கலந்துகொண்டார்.

அச்சந்திப்பில் சங்கத்தின் செயலாளர் பிரேம்ஜி ஞானசுந்தரன், சங்கத்தின் தலைமைக்குழு உறுப்பினர்கள் மல்லிகைஜீவா, சோமகாந்தன் மற்றும் எழுத்தாளர்கள் சி.வி. வேலுப்பிள்ளை, மு. கனகராஜன், அந்தனிஜீவா, ராஜரீகாந்தன், மேமன்கவி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

பேராசிரியர் கைலாசபதி சற்று தாமதமாக வந்தார். அவரைக் கண்டதும் பாண்டியன் எழுந்து சென்று அவரது கரம்பற்றிக்குலுக்கி, அரவணைத்து அழைத்து வந்து தமக்கருகில் அமரச்செய்தார். இத்தனைக்கும் இடதுசாரி கருத்தியலில் பாண்டியனுடன் முரண்பட்டவர்தான் கைலாசபதி.

'மக்கள் சீனம் – காட்சியும் கருத்தும்' (1979) என்ற நூலை கைலாசபதி தமது மனைவி சர்வமங்களத்துடன் இணைந்து எழுதியிருந்தார்.

ஈழத்து இலக்கியவாதிகளுடன் நேசம்பாராட்டியவர்தான் தோழர் பாண்டியன். 1983 ஆம் ஆண்டு இலங்கை கலவரத்தின் பின்னர் தமிழகம் சென்று தஞ்சமடைந்த சில எழுத்தாளர்களின் தேவைகளையும் கவனித்தார்.

பாண்டியன் கொழும்பில் அன்று பாரதி விழாவில் பேசுகையில், நாம் அறியாத பாரதியின் சில பக்கங்களை யும் சுட்டிக்காண்பித்தார்.

பிரிட்டிஷாரின் ஆளுகைக்குள் இந்தியா இருந்த போது தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலை வராக(கலெக்டராக) இருந்த ரொபர்ட் வில்லியம் எஸ்கோர்ட் ஆஷ் 1911 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17 ஆம் திகதி வாஞ்சிநாதனால் சுட்டுக்கொல்லப்பட்ட செய்தியின் பின்னணியில் பாரதிக்கு இருந்த தொடர்பு பற்றியும் பாண்டியன் சொன்னார்.

அப்பொழுது 29 வயதிலிருந்தவர் பாரதி. வாஞ்சி நாதனுக்கு 25 வயது. ஆஷ் கொல்லப்பட்டு சில நிமிடங்களிலேயே வாஞ்சிநாதனும் தனக்குத்தானே சுட்டு அதே நாளில் தற்கொலை செய்துகொண்டார்.

அந்தத் துப்பாக்கி ஒரு மரத்தால் செய்யப்பட்ட அம்பாள் சிலைக்குள் வைத்து எடுத்துச்செல்லப்பட்ட செய்தி பாரதிக்கு தெரியும் என்ற தொனியில் பாண்டியனின் உரை அன்று அமைந்திருந்தது.

(14 ஆம் பக்கம் பார்க்க...)














காலைக்கதிர்
Kalaikkathir

# திருக்குறள் காட்டும் சமூக நல்லிணக்கம்

## வள்ளுவத்தின் சிறப்பு

– மகாதேவஐயர் ஜெயராமசர்மா –
(மேனாள் தமிழ் மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேண், ஆஸ்திரேலியா)

தமிழிலே தோன்றிய பல நூல்கள் சமூக நல்லிணக்கத்தைப் பற்றிய கருத்துக்களைப் பலவாறு எடுத்துக்காட்டி இருக்கின்றன. அவை கூறும் கருத்துக்கள் முழுமையானவையாகவோ எக்காலத்துக்கும் ஏற்றனவாகவோ இருகின்றனவா என்று பார்க்கின்ற பொழுதான் திருக்குறளின் சிறப்புத் துலங்குகின்றது.

சமூக நல்லிணக்கம் சம்பந்தமான கருத்துக்களைப் பகர்ந்து நின்ற நூல்களுக்கு மத்தியில் திருக்குறள் பெறுகின்ற இடம் முக்கியத்துவம் மிக்கது எனலாம். திருக்குறள் – தான் தோன்றிய காலம் முதல் இன்றளவும் தனித்துவம் மிக்கதாகவே விளங்குகிறது என்பதை எவருமே ஒத்துக் கொள்ளுவார்கள். அந்த அளவுக்கு அதன் அமைப்பும், அதில் சொல்லப்பட்ட கருத்துக்களும் இருக்கின்றன. மானிடம் செழிக்க, மனித உள்ளங்கள் செழிக்க, உலகமே செழிக்க, மிக உயர்ந்த சிந்தனையின் வெளிப்பாடாகவே திருக்குறள் அமைந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பகவத்கீதை, திருக்குரான், பைபிள் என்பவற்றிலும் சமூக நல்லிணக்கத்துக்கு ஏற்ற கருத்துக்கள் இடம் பெற்றாலும் அவை மதம் சார்ந்து நிற்கின்றன என்னும் நிலையும் காணப்படுகிறது. ஆனால் திருக்குறள் எந்த விதச் சமயச்சார்பும் கலவாத சமுதாயச் சிந்தனையும் நல்லிணக்கச் சிந்தனையும் மிகுந்த நூலாக இருக்கிறது. கூறப்படும் சிந்தனைகளும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த கூடியனவாகவும் யாராலும் கூறப்படாதனவாகவும், புரட்சிகரமானவையாகவும், புதுமையானவையாவும், இருக்கின்றன என்பதும் முக்கியமாகும்.

ஒருநூல் எழுதப்பட்ட காலத்தில் கூறப்பட்ட கருத்துக்கள் சிலகாலத்துக்கு மட்டுமே பொருந்துவனவாகவே பெரும்பாலும் இருக்கும். சிலவேளை எழுதப்பட்ட காலத்தோடே அக்கருத்துக்களும் வலுவிழந்தும் கூடப் போய்விடலாம். அப்படியான நூல்கள் நிலைத்து நிற்பது என்பது கடினமானதாகவே இருக்கும். ஆனால் எழுந்த காலம் தொடக்கம் இன்றுவரை, ஏன் இன்னும் பலகாலங்களுக்கும், நிலைத்து நிற்கும் அளவுக்குச் சிந்தனைக் கருவூலங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கும் பெருமையை திருக்குறள் பெற்றிருப்பதால்தான் அது வாழும் நூலாகவும் சமூகத்துக்கு ஏற்ற நல்ல கருத்துக்களை வழங்கி நிற்கும் நூலாகவும் விளங்கிறது எனலாம்.

### சமூக நல்லிணக்கத்தின் அவசியம் என்ன?

இனமும், மதமும், மொழியும், அவசியமா? இவை மனித சமூகத்துக்கு நன்மையைப் பயக்கக் கூடியனவா? இவை இல்லாவிட்டால் மனித சமூகத்தால் வாழமுடியாமலே போய்விடுமா? –என்னும் கேள்விகளும் எழுகின்றன.

இனத்தாலும், மொழியாலும், மதத்தாலும் ஏற்பட்ட மோதல்களும், அதனால் மனித சமூகம் பட்ட வேதனைகளும், சோதனைகளும், அழிவுகளும் உலகவரலாற்றில் பெரும்பக்கமாகவே இருப்பதை யாவரும் அறிவர். நூறாண்டுகள் உலகில் இரண்டு மதங்களாலும், இனங்களாலும் நடந்த சிலுவை யுத்தமதை வரலாற்றிலிருந்து அகற்றிடவே இயலாது. ஆனால் இன்றும் இந்த நிலையில் மாற்றம் உண்டா என்றால் சரியான பதிலை தேடித்தான் காணவேண்டி இருக்கிறது.

மதம்தான் மனித சமூகத்துக்குப் பங்கமாக அமைந்தது என்றால் மொழியும் கூடவே இணைந்து கொள்ளுகின்றது. மொழியினை வெறியாகக் கொண்ட காரணத்தால் இன்னுமே உலகின் பல பகுதிகளிலும் மோதலும், அதனால் பல கோரங்களும் நடைபெற்ற வண்ணமுமே இருப்பதை நாளாந்தம் பார்க்கவே முடிகிறது எனலாம்.

இனங்கள் தங்களின் தனித்துவத்தை நிலைநாட்ட வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு மோதல்களை உருவாக்கி அதனால் சமூகத்தின் அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் நிலையினையும் காணமுடிகிறது.

மனிதன் என்பவன் தனித்து வாழவே முடியாது. அவன் இணைந்துதான் வாழ வேண்டி இருக்கிறது. இணைந்து வாழும்பொழுது அங்கு சமூகம் என்பது உருவாகிறது. அந்தச் சமூகம் என்பது உலகளாவும் பொழுது உலக சமூகமாக விரிவடைகிறது. விரிவடைந்த சமூகங்கள் விரிசல்கள் இல்லாமல் இருப்பதற்கு என்னதான் வழி என்று சிந்திக்கும் வேளையிலே சமூக நல்லிணக்கம் என்பதன் தேவை அவசியமாகி நிற்கிறதல்லவா !

இனமும் மதமும் மொழியும் சமூகத்துக்கு மிகவும் இன்றியமையாதனவாகும். ஆனால் அவையோ சமூக நல்லிணக்கத்துக்கு இடையூறாக அமையும் பொழுதுதான் அவை தேவைதானா என்னும் எண்ணமே தோன்றுகிறது எனலாம். இனமும் மதமும் மொழியும் சமூகத்துக்கு வேண்டியவைதான் . அவற்றால் சாந்தியும், சமாதானமும், சகவாழ்வும், ஒற்றுமையும், விட்டுக்கொடுக்கும் பண்பும், அன்பும், அரவணைப்பும், போட்டியற்ற மனோபாவமும், அறம் பற்றிய எண்ணப்பாடும், ஒழுக்கமுடை அரசியலும், நற்பண்புகள் நிறைந்த தலைமைகளும், நல்ல குடிமக்களும் , தோற்றுவிக்கப்படுமானால் அவை நிச்சயம் சமூகத்துக்கு இன்றியமையாதனவாகவே இருக்கலாம் அல்லவா?

இன்றைய நாளில் சமூக நல்லிணக்கம் என்பது மிக மிக அவசியமாய் இருக்கிறது. உலக நாடுகளின்



சிந்தனைகளால் அமைதிப் பூங்காக்கள் அமைதியைத் தொலைத்தே நிற்கின்றன. சமூக நல்லிணக்கத்துக்காக பல அமைப்புகள் உருவான பொழுதிலும் அவற்றுக் கிடையே கூட நல்லிணக்கத்தை எட்டிவிட முடியாத ஒரு பரிதாப நிலையையே பார்க்க முடிகிறது. இவ்வேளையில் சமூக நல்லிணக்கம் பற்றி சிந்திப்பதும் அதற்காக இயன்றளவில் முயற்சிகள் எடுப்பதும் அனைவரதும் மிகவும் முக்கியமான தார்மீகக் கடமையேயாகும். அந்த வகையில் சமூக நல்லிணக்கம் பற்றிய திருக்குறளின் வழிகாட்டலை அனைவருமே மேற்கொள்வது மிகவும் பொருத்தப்பாடுடையதாக இருக்கும் என்று கருதுகின்றேன். (தொடரும்)

### திருக்குறளின் வழி காட்டல்

உலகில் பொதுமறை நூலாகவும், வாழ்வியல் நூலாகவும், அறநெறி நூலாகவும், அன்பு நெறி நூலாகவும், நீதியினை நல்கும் நூலாகவும், ஒழுக்க நெறி நூலாகவும், நல்ல அரசியல் நெறிகளை வழங்கும் நூலாகவும், திருக்குறள் திகழ்கின்றது. ஏனைய பல நூல்களில் திருக்குறள் காட்டும் சிந்தனைகள் சில இருந்தாலும் அவையெல்லாம் திருக்குறள் போன்று விளங்கவில்லை என்பதை மனமிருத்துதல் அவசியமாகும்.

மொழிபற்றிக் கூறவில்லை. இனம் பற்றிக் கூறவில்லை. மதம் பற்றிக் கூறவில்லை. எது தேவையோ, அதுவும் சமூகத்துக்கு சமூக நல்லிணக்கத்துக்கு தேவையோ அதைப்பற்றியே திருக்குறள் கூறி நிற்கிறது. திருக்குறள் என்னும் நூல் கற்பனையின் வடிவம் அன்று. நடக்க முடியாத, செய்ய இயலாத, நடைமுறைகளுக்கு ஒவ்வாத சிந்தனைகளைத் தன்னிடத்துக் கொண்டிருக்கவில்லை. முக்காலத்தையும் மனதிற்கொண்டுதான் வள்ளுவப் பெருந்தகை திருக்குறளைத் தந்திருக்கிறார் எனலாம். எனவேதான் உலகினர் யாவரையும் திரும்பிப் பார்க்க வைத்து உலகினர் அனைவரதும் மனங்களிலும் பதியும் பாங்கில் திருக்குறள் இருக்கிறது எனலாம்.

கடவுள் கொள்கையினை மையமாகக் கொண்டே உலக மதங்கள் அனைத்தும் தமக்குள் போட்டி போட்டு வாதப் பிரதிவாதங்கள் செய்து அதற்கு அரணாக பல நூல்களையும், இலக்கியங்களையும், ஆதாரம் ஆக்கி சமூகத்தில் முரண்பாடுகளைத் தோற்றுவித்து, நல்லிணக்கத்தை அகற்றிவிட முயற்சிக்கின்றன. ஆனால் உலகமே வியந்து பார்க்கும் திருக்குறள் இதற்கெல்லாம் துணை போகாமல் உலக நலனைக் கருத்திற்கொண்டு கடவுள் பற்றியோ, மதம் பற்றியோ கூறாமல் பொதுமையான சிந்தனையினை வலுவாக எடுத்துக் கூறி நல்ல ஒரு சமூக நல்லிணக்கத்துக்கு வழிகாட்டி நிற்கிறது எனலாம்.

**எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு**
**எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு**

என்று திருக்குறள் – பகுத்தறிவுத் தளத்தினின்றும் கடவுள் பற்றியும் மதம் பற்றியுமான தனது சிந்தனையினை வெளிப்படுத்தி நிற்கிறது. கடவுளைப்பற்றி திருக்குறள் எந்தவொரு பெயரையும் தொட்டுக்காட்டவில்லை. கடவுளுக்கு என்று எந்த உருவத்தையும் காட்டவும் இல்லை. கடவுள் என்றால் ஒரு சக்தி என்பதுதான் குறளின் வெளிப்பாடாகும். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் கடவுளைப்பற்றியோ மதங்களைப் பற்றியோ வள்ளுவர் திருக்குறள் வாயிலாக காட்டிடவில்லை என்பது நோக்கத் தக்கதாகும். வள்ளுவர் வாழ்ந்த காலமோ இரண்டாயிரம் வருடங்களுக்கு முந்தியதாகும். அந்தக் காலத்திலே பல மத நம்பிக்கைகளும், கடவுள் பற்றிய பல கருத்துக்களும் நிலவிய சூழலில் பொதுமையான ஒரு சிந்தனையை முன்வைத்த வள்ளுவம் அப்பொழுதே சமூக நல்லிணக்கத்தை உள்வாங்கியே இருந்திருக்கிறது என்றால் வள்ளுவத்தை விட – இக்கால சமூக நல்லிணக்கத்துக்கு உரிய மிகச்சிறந்த வழிகாட்டி நூல் இருக்குமா என்பது ஐயத்துக்கிடமான ஒன்றே. வள்ளுவத்தின் இந்தக் குறளின் கருத்தே வள்ளுவத்தின் அடிநாதமாகவே அமைகிறது என்று கூட இயம்பிட முடிகிறது எனலாம்.

மதச் சார்பின்மைக்கு மட்டுமல்லாது இன்று அவசியம் வேண்டப்படும் மனித நேயத்துக்குமே சிறந்த முன்னோடியாக வள்ளுவம் விளங்குகின்றது என்பதும் மனங் கொள்ளத் தக்கதாகும்.மதச் சார்பின்மைதான் சமூக நல்லிணக்கத்துக்கு மிகவும் வேண்டத்தக்கதாக இருக்கிறது . மதங்களின் வசமாகிய மனிதர்கள் மனித நேயத்தை தொலைத்து விடுவதால் அவர்கள் வாழும் சமூகத்தில் நல்லிணக்கம் என்பது காணாமலே போய்விடுகிறது. அவர்களுக்கு எல்லாம் வள்ளுவம்தான் நல்ல வழிகாட்டலை வழங்கும் வல்லமை பெற்றதாகும் என்பதுதான் மறுக்க முடியாத உண்மையாகும்.

சமூக நல்லிணக்கத்துக்கு மதச்சார்பின்மை மிகவும் அவசியமாக இருப்பதுபோலவே இனம் பற்றிய எண்ணக் கருவிலும் ஒரு பொதுமை இருக்க வேண்டியதும் அவசியமாகின்றது. சமூகம் எனும் பொழுது அது தானாகவே அமைந்துவிட முடியாது. தனிமனிதனிலிருந்து ஆரம்பித்து, குழுவாகி, கூட்டமாகி, இனமாகித்தான் சமூகம் என்பது வெளிவருகிறது. இதனால் சமூகத்தில் மாற்றம் வரவேண்டுமானால் முதலில் தனிமனிதனிடம் மாற்றம் வருதல் அவசியமாகிறது. வள்ளுவத்தின் வழியும் கூட அப்படியிருக்கின்றது என்றுதான் கருதவேண்டி இருக்கிறது. தனிமனிதன் தனக்குள் முரண்பாடுகளைக் களைதல் அவசியமும் ஆகின்றது. பிறப்பினால் உயர்வு வருகிறது என்னும் மனப்பாங்கினை எடுத்துவிட வேண்டும் என்பதுதான் வள்ளுவத்தின் வழியாக இருக்கிறது.

“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்னும் குறளின் குரல் சமூக நல் இணக்கத்தை தனிமனிதனிடமிருந்தே ஆரம்பிக்கிறது எனலாம். பிறப்பில் உயர்வு தாழ்வு இல்லை என்னும் எண்ணம் தனிமனிதனிடம் வேரூன்றி விடுமானால் அந்த எண்ணம் சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்திவிடும் என்று வள்ளுவம் நம்பியது. இந்த எண்ணம் சமூகத்தில் நிலைபெற்று விடுமானால் இன்று உலகில் இனம் பற்றி எண்ணி மோதுகின்ற நிலை அற்று நல்லதோர் சமூக நல்லிணக்கம் பிறக்க வழி வருமல்லவா ?

**மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்**
**கீழல்லார் கீழல் லவர்**
**ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்**
**எய்துவர் எய்தாப் பழி**

இதனை தனிமனித அறமாகவும் கொள்ளலாம். சமூக அறமாகவும் கொள்ளலாம். உயர்வுக்கும் தாழ்வுக்கும் இதைவிட நல்லுபதேசம் வழங்கிவிட முடியாது என்பது வள்ளுவத்தின் வழி எனலாம். இந்தக் கருத்து மக்களிடம் பதியும் பொழுது இனம்பற்றிய எண்ணக் கருவில் ஒரு சமநிலை தோன்றிட வழி பிறக்கும் அல்லவா? அப்படிப் பிறப்பதுதானே சமூக நல்லிணக்கத்துக்கு நல்லதோர் உறுதுணையைக் கொடுக்கும் அல்லவா?

(14 ஆம் பக்கம் பார்க்க...)

# நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான சட்டங்களை ஒழுங்குபடுத்துங்கள்!

## இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் கோரிக்கை

இலங்கையின் நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தை, ஏனைய நாடுகளில் உள்ளமையைப்போன்று ஒழுங்குபடுத்தி நடைமுறைப்படுத்த வேண்டியதற்கான அடிப்படைக்காரணங்கள் தொடர்பில் இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்தின் முன்மொழிவுகள் அடங்கிய தொகுப்பொன்றை இந்த வாரம் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான நீதியமைச்சர் அலி சப்ரிக்கு இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் அனுப்பி வைத்துள்ளது.

நீதி அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்தக் கடிதத்தில், நீண்டகாலமாக உணரப்படும், நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான சட்டங்களை ஒழுங்குபடுத்துவதற்கான அவசியத்தை இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் ஜனாதிபதி சட்டத்தரணியுமான மறைந்த லக்ஷ்மன் கதிர்காமர் தலைமையிலான 2003 ஆம் ஆண்டுக்கான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

அத்துடன் இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆலோசனைக் குழுவால் 2006 இல் தயாரிக்கப்பட்ட நீதிமன்ற அவமதிப்புச் சட்டம் தொடர்பான ஒரு வரைவையும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் நீதி அமைச்சரிடம் சமர்ப்பித்துள்ளது. மேலும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் உள்ளீடுகளையும் இந்த அறிக்கை கொண்டுள்ளது.

2003 இல் இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட அதே பரிசீலனைகள் இன்று அதைவிட அதிக வலுவுடன் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும், இலங்கையின் சட்டம் மற்றும் அதனுடன் தொடர்புடைய சட்டக் கோட்பாடுகள் ஒழுங்குபடுத்தப்பட்டதாக அமையப்பெற்றிருக்க வேண்டும் எனவும், அதனடிப்படையில் சட்ட ரீதியாகவும், நடைமுறை ரீதியாகவும் நிகழும் அவமதிப்புக்கான சக்தி பாகுபாடின்றி நியாயமாக பயன்படுத்தப்பட வேண்டியதோடு, அவமதிப்புக்கான தண்டனை சட்டத்தால் வரையறுக்கப்பட வேண்டும் என்பது முக்கியமான கொள்கையாக இருக்க வேண்டும் எனத் தாம் உணர்வதாக இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும், இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கமும் அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளன.

இலங்கையில் நீண்ட காலமாக தாமதமாகிவரும் நீதிமன்ற அவமதிப்பு சட்டத்தை வரைவதற்கு அரசாங்கம் விரும்புமானால், இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் தம்மால் முன்வைக்கப்பட்ட எந்தவொரு முன்மொழிவுகள் தொடர்பிலும் தெளிவுபடுத்த தயார் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது. இலங்கை பத்திரிகை சமூகம், இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம், சுதந்திர ஊடக இயக்கம் மற்றும் இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் ஆகியோர் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் ஒருங்கிணைந்த பங்காளர்களாக இருக்கும் அதேவேளை, ஊடக ஊழியர் தொழிற்சங்க கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம், தமிழ் ஊடக கூட்டமைப்பு, தெற்காசிய சுதந்திர ஊடக அமைப்பு ஆகியன அதன் இணைந்த பங்காளர்களாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச நாடுகளிடம் தீர்வைப் பெற முயற்சித்தால் பிரிவினை அதிகரிக்கும்!

## இப்படிக் கூறுகிறார் நீதி அமைச்சர் அலி சப்ரி



ஜெனிவா கூட்டத்தொடரின் அறிக்கையானது இலங்கை இராணுவத்தினருக்கு எதிராகவே முன்வைக்கப்பட்டுள்ளது. இலங்கை வாழ் மக்களுக்கு நாட்டுக்குள் ஏதேனும் பிரச்சினைகள் காணப்பட்டால், அதற்கான தீர்வினை நாட்டில்தான் பெற்றுக் கொள்ளமுடியும். அதனை விடுத்து சர்வதேச நாடுகளிடம் தீர்வுப் பெற்றுக் கொள்ள முயற்சித்தால் நாட்டு மக்கள் மத்தியில் மேலும் பிரிவினையையே உருவாகும் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

நீதி அமைச்சில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறிய தாவது -

ஜெனிவா கூட்டத்தொடரின் அறிக்கையானது ஒரு பக்கத்திற்கு சார்பாக முன்வைக்கப்பட்டுள்ளதாகவே நான் எண்ணுகின்றேன். இலங்கை இராணுவம் பயங்கரவாத அமைப்புக்கு எதிராகவே யுத்தம் செய்திருந்தது. இந்நிலையில் அதனை மறந்து இராணுவத்தின் மீது குற்றம் சுமத்தும் வகையிலேயே இந்த அறிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை வாழ் மக்களாகிய நாம் எமக்கேதேனும் சிக்கல் நிலைமைகள் காணப்பட்டால், அதற்கான தீர்வினை நாட்டுக்குள்தான் பெற்றுக்கொள்ள வேண்டும். அதனை விடுத்து நாம் சர்வதேச நாடுகளிடம் தீர்வினை பெற்றுக் கொள்ள முயற்சித்தால் எம் மத்தியில் மேலும் இடைவெளியேற்படுவதை தவிர்க்க முடியாது.

இதேவேளை, கொவிட் - 19 வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழக்கும் முஸ்லிம் ஜனாஸாக்களை தகனம் தொடர்பில் அரசாங்கம் எந்த தீர்மானத்தையும் எடுக்கவில்லை. அது சுகாதார பிரிவினரால் எடுக்கப்பட்ட தீர்மானமாகும். இது தொடர்பில் பல சந்தர்ப்பங்களில் நான் விளக்கமளித்துள்ளேன். மேலும் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானின் விஜயத்தின் போது இந்த ஜனாஸா விவகாரம் தொடர்பில் அரசாங்கத்துடன் கலந்துரையாடல் இடம்பெற்றதா என்பது தொடர்பில் எனக்கு விளக்கமில்லை. ஆனால் வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருந்தன.

இதன்போது உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்திவந்த ஆணைக்குழு முன்னாள் ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு விசாரணைகளை மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ள விடயம் தொடர்பில் அமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், முன்னாள் ஜனாதிபதி தொடர்பில் சட்டநடவடிக்கை எடுப்பதா இல்லையா என்பதை உயர்நீதிமன்றமே தீர்மானிக்கும். அது தொடர்பில் எனக்கு எதுவும் தெரியாது. இதேவேளை ஜனாதிபதி ஆணைக்குழு திட்டமிட்டே முன்னாள் ஜனாதிபதிக்கு எதிராக குற்றம் சுமத்தியுள்ளதாக கூறப்படுவதே ஏற்றுக் கொள்ள முடியாது. அவரது ஆட்சிகாலத்திலேயே இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருந்தது.

# சைவ பாடல்கள் ஒலித்த வட்டுவாகலில் பௌத்தமத காப்புரைகள் ஒலிக்கின்றன!

## ரவிகரன் வேதனை



சைவ இறை இசைப் பாடல்கள் மட்டுமே ஒலித்த வட்டுவாகல் கிராமத்தில் தற்போது பௌத்த மதக்காப்புரைகள் காலையும் மாலையும் ஆக்கிரமிப்பு உரைகளாக ஒலிக்கவிடப்படுகின்றன என முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, வட்டுவாகல் கிராமம் கடற்படை, இராணுவம், வனஜீவராசிகள் திணைக்களம் என பல்வேறு அரச இயந்திரங்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

முல்லைத்தீவு - கள்ளப்பாடு வடக்குப் பகுதியில் அமைந்துள்ள ரவிகரனின் மக்கள் தொடர்பகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் -

வட்டுவாகல் ஒரு தனித் தமிழ் சைவக் கிராமமாகும். இந்தக் கிராமத்தில் தற்போது சத்தமில்லாதவகையில் பல வழிகளிலும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் மேலோங்கிவருகின்றன.

அந்த வகையில், அங்கு கோட்டாபய கடற்படைத் தளம் என்னும் கடற்படைத்தளம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதனால் வட்டுவாகல் அக்கரையில், வடக்காறுப் பகுதிக்கு எவரும் மீன்பிடிச் செயற்பாட்டிற்குச் செல்ல முடியாதவாறு 670 ஏக்கர், 03 றூட், 10 பேச் காணியை கடற்படையினர் அபகரித்துள்ளனர்.

இதுதவிர, வட்டுவாகல் இக்கரையிலும் வடக்காறுப் பக்கமாக கிட்டத்தட்ட நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்தை அபகரித்து அங்கு இராணுவமுகாம் அமைக்கப்பட்டதோடு மாத்திரமன்றி, பாரிய பௌத்த விகாரையும் அங்கு அமைக்கப்பட்டு ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் வலுப்பெற்று வருகின்றன.

அத்தோடு நந்திக்கடலும், நந்திக்கடலோடு சேர்ந்த வயல்நிலங்கள், நிலப்பகுதிகளை உள்ளடக்கி வனஜீவராசிகள் திணைக்களம் ஏறத்தாழ 10 ஆயிரத்து 250 ஏக்கர், அதாவது 4 ஆயிரத்து 141.67 ஹெக்டேயர் நிலத்தை தங்களுடைய ஆளுகைக்குள் கொண்டுவந்திருக்கின்றார்கள்.

இந்தவகையில் கடற்படை, இராணுவம், வனஜீவராசிகள் திணைக்களம் என அரச இயந்திரங்கள் வட்டுவாகல் பகுதியில் தமது ஆக்கிரமிப்புச் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளன.

அதேவேளை, இந்தப் பகுதி மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட காலத்தில், சிங்கள பௌத்த குடும்பங்களே இல்லாத இந்த வட்டுவாகல் கிராமத்தில் பௌத்த விகாரை ஒன்றும் அங்கு அமைக்கப்பட்டது.

இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரையில் பௌத்த மத காப்புரைகள் காலையும் மாலையும் வட்டுவாகல் கிராமம் பூராகவும் ஒலிபெருக்கியூடாக ஒலிபரப்பப்படுகின்றன. அதாவது பௌத்த மதக் காப்புரைகள் அங்கு ஆக்கிரமிப்பு உரைகளாக அங்கு ஒலிக்கவிடப்படுகின்றன.

ஒரு தனித் தமிழ் சைவக் கிராமத்தில் இப்படியானதொரு பௌத்த மத ஆக்கிரமிப்பு இடம்பெறுவதுடன் கடற்படை, இராணுவம், வனஜீவராசிகள் என்பவற்றாலும் ஆக்கிரமிப்புக்கள் இடம்பெற்றுவருவதால், வட்டுவாகல் கிராமத்தில் வாழும் தமிழ் மக்கள் கூனிக் குறுகிப்போய் இருக்கக்கூடிய நிலையே ஏற்பட்டுள்ளது.

நாளாந்தம் சைவ இறை இசைப் பாடல்கள் ஒலித்துவந்த வட்டுவாகல் கிராமத்தில் தற்போது பௌத்த மத காப்புரைகள் ஆக்கிரமித்துள்ளன. - என்றார்.



# இலங்கை தயாரித்த முகக் கவசம் பிரதமர் தலைமையில் அறிமுகம்!

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் நிபுணர்கள் குழு நீண்டகாலமாக மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் தயாரித்துள்ள வைரஸ்களை அழிக்கக் கூடிய புதிய முகக் கவசம் நேற்று நாடாளுமன்றத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அறிமுகம் செய்யப்பட்டது.

இதுவரை பயன்பாட்டில் உள்ள சகல முகக்கவசங்களையும் விட உயர்ந்த தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ள இந்த முகக் கவசம் மூன்று அடுக்குகளைக் கொண்டது என ஆய்வுகளை நடத்திய பேராதனை பல்கலைக்கழகத்தின் இரசாயனவிஞ்ஞானம் தொடர்பான சிரேஷ்ட பேராசிரியர் காமினி ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்த முகக்கவசத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள தொழில்நுட்பம் தொடர்பில் அவர் குறிப்பிடுகையில், முதலாவது அடுக்கில் உமிழ்நீர் போன்ற திரவங்கள் உடனடியாக நீக்கப்படும். இரண்டாவது அடுக்கில் உள்ள விசேட இரசாயனம் வைரஸை அழிப்பதுடன் மூன்றாவது அடுக்கில் உமிழ்நீர் ஆவியாகும் என்றார். அத்துடன் இந்த முகக்கவசத்தை கழுவி தொடர்ந்தும் 25 தடவைகள் பயன்படுத்த முடியும் என்றும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

காலைக்கதிர் Kalaikkathir

# ஐ.நாவுக்குப் பதிலளிப்பதற்கு முன்னர் மனித உரிமைகளை பாதுகாக்க வேண்டும்

## இ.சந்திரசேகர் தெரிவிப்பு




இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு பதில் அளிக்க வேண்டும் என்றால் முதலில் நாட்டில் மனித உரிமைகளை பாதுகாக்க வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினர் இ.சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் விடுதலை முன்னணியின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இதனை தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 12 வருடங்களாக மக்களுடைய உரிமைகளை மறுதலிக்கின்ற அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராகவே பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டத்தில் அதிகமான மக்கள் கலந்து கொண்டிருந்தார்கள்.

மறுபக்கத்தில் பல வருடங்களாக கீரியும் பாம்புமாக இருந்த முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் தற்போது ஒன்றிணைந்து அரசாங்கத்துக்கு எதிராக போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றார்கள் எதிர்வரும் காலத்தில் தெய்வேந்திர முனை தொடக்கம் பருத்தித்துறை வரையான போராட்டத்தை நடத்தவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்றார்.

# மாணவன் மீது பொலிஸ் தாக்கு: சரத் வீரசேகர அதிரடி உத்தரவு!

## பேலியகொடவில் சம்பவம்



பேலியகொட பொலிஸ் நிலையத்தில் இறுதி ஆண்டு சட்டப் படிப்பு மாணவரை கொடூரமாக தாக்கியதாக கூறப்படும் குற்றச்சாட்டு குறித்து விரிவான விசாரணையை நடத்துமாறு பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன் குறித்த விசாரணை நிறைவடையும் வரை சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகளை இடைநீக்கம் செய்யுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இந்த சம்பவம் குறித்து நீதி அமைச்சர் அலி சப்ரியும், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தலைவர் சாலிய பீரிஸும் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

# பாகிஸ்தான் பிரதமருக்கு ஜனாதிபதி விருந்துபசாரம் வழங்காதமை ஏன்?

## ஐ.தே.க. கேள்வி



இலங்கைக்கு உத்தியோகப் பூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விருந்துபசாரம் வழங்காமைக்கு வெளிநாடொன்றின் அழுத்தமா காரணம் என கேள்வி எழுப்பியுள்ள ஐக்கிய தேசியக் கட்சி , நாடாளுமன்ற உரையை இரத்து செய்தமை குறித்தும் சந்தேகம் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது .

இது குறித்து மேலும் தெளிவுப்படுத்திய வஜிர அபேவர்தன கூறுகையில் -

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விருந்துபசாரம் வழங்காமைக்கான காரணம் என்னவென்று தெரியவில்லை. இதற்கு முன்னர் முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் இலங்கை வந்தபோது, அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தனித்தனியாக விருந்துபசாரங்களை வழங்கியிருந்தனர்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில், அப்போதைய பாகிஸ்தான் பிரதமரான பர்வேஸ் முஷாரப் இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தார். இதன்போது ஜனாதிபதி சந்திரிக்கா மற்றும் அப்போதைய பிரதமராக செயற்பட்ட ரணில் விக்கிரமசிங்கவும் தனித்தனியாக விருந்துபசாரம் வழங்கினர். இவ்வாறு இலங்கைக்கு வருகைதரும் வெளிநாட்டு தலைவர்களுக்கு உபசரிப்புகளை செய்வதானது காலகாலமாக பின்பற்றப்பட்டு வரும் செயற்பாடாகும்.

இந்நிலையில், பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மாத்திரமே விருந்துபசாரம் அளித்திருந்தார். இந்த விருந்துபசாரத்தில் 150 பேர் வரையில் கலந்து கொண்டிருந்தனர். அதற்கமைய 200 பேர் உள்ள நாடாளுமன்றத்தில் பாகிஸ்தான் பிரதமரின் உரையை நடத்த அனுமதிக்காமையும் ஜனாதிபதி விருந்துபசாரத்தை வழங்காமையும் பெரும் சந்தேகத்தையே தோற்றுவிக்கின்றது என தெரிவித்தார்.

# பொலிஸ் இன்ஸ்பெக்டர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள முயற்சித்த கான்ஸ்டபிள் இடைநிறுத்தம்

சிலாபம், பெப். 28

சிலாபம் பொலிஸ் நிலையத்தில் பிரதான பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் மீது துப்பாக்கிச் சூட்டை நடத்த முயற்சித்த அதே பொலிஸ் நிலையத்தில் பணிபுரிந்து வந்த பொலிஸ் உத்தியோகத்தர் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

சிலாபம் பொலிஸ் நிலையத்தில் கடந்த புதன் கிழமை இரவு பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பிரதான பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரை தனது கடமைநேர துப்பாக்கியால் சுடுவதற்கு முயற்சித்துள்ளதாகவும் , இதன்போது அங்கிருந்த பிரிதொரு பொலிஸ் உத்தியோகத்தர் அதனை தடுத்துள்ளதாகவும் தெரியவந்ததை அடுத்து அது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

அன்றைய தினம் மதுபோதையில் வாகனங்களை செலுத்தும் சாரதிகளை அடையாளம் காணுவதற்காக விசேட சுற்றிவளைப்பு இடம்பெற் றுள்ளது. இதன்போது கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தொடர்பில் பொலிஸ் இன்ஸ்பெக்டருக்கும் மற்றய பொலிஸ் உத்தியோகத்தருக்கும் இடை யில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இதன்போது பொலிஸ் உத்தியோகத்தர் பொலிஸ் இன்ஸ்பெக்டர் மீது துப்பாக்கி சூட்டை நடத்த முயற்சித்துள்ளதுடன், அவ்விடத்தில் இருந்த இன்னுமொரு பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் அதனை தடுத்துள்ளார். குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் பணியிடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளதோடு மேலதிக விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
| --- | --- |
| பிறந்த திகதி - 1981.10.16 | பிறந்த திகதி - 1978.10.02 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - கார்த்திகை 4 | நட்சத்திரம் - அத்தம் |
| செவ் - 08இல் | சூ/செவ் - ---- |
| பாவம் - ----- | பாவம் - 22 1/4 |
| கல்வி - A/L | கல்வி - BBA, MA பட்டதாரி |
| தொழில் - UK PR | தொழில் - அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| எதிர்பார்ப்பு - படித்த அழகான UK வரவிரும்பும் பெண் தேவை. | எதிர்பார்ப்பு - உத்தியோகம் தேவை. |

யாழ் காலைக்கதிரில் காலை, மாலைப் பதிப்பிலும் முகநூலின் ஊடாகவும் மணமக்கள் விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.
அலுவலக நேரம் - எல்லா நாள்களும் காலை 8.30 தொடக்கம் 5.30 வரை.
பதிவுக் கட்டணம் 1000 + 300
Facebook - Kalyanamalaivada.com
குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
076 885 6925
077 857 8528

Anna EXPRESS Courier Services
DHL
அண்ணா
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
077 8889388
075 3305500
070 3305500
லண்டன் ⇨ 1000/=
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)
எம்முடன் இணைந்து உங்களிடத்தில் பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்

| | | |
| --- | --- | --- |
| யாழ்ப்பாணம் | சங்கத்தானை | கனகராயன்குளம் |
| சங்கானை | பளை | மல்லாவி |
| கல்வியங்காடு | கிளிநொச்சி | மன்னார் |
| ஆவரங்கால் | புதுக்குடியிருப்பு | வவுனியா |
| நெல்லியடி | முல்லைத்தீவு | கொழும்பு |

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park

# ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை நாளை முதல் ஒன்பது நாள்கள் இம்முறை 6 லட்சத்து 22 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றுவர்

கொழும்பு,பெப்.27

கொரோனாத் தொற்று பரவல் காரணமாக பிற்போடப்பட்டிருந்த கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை வரும் மார்ச் முதலாம் திகதி (திங்கட்கிழமை) ஆரம்பமாக உள்ள நிலையில் அது தொடர்பில் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு இம்முறை நாடளாவிய ரீதியில் 6 லட்சத்து 22 ஆயிரம் பேர் தோற்றவுள்ளனர் எனக் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இம்முறை 09 நாள்கள் பரீட்சைகள் இடம்பெறும் எனவும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து பரீட்சை நிலையங்களும் தொற்று நீக்கம் செய்யப்பட்டிருக்கும் என்பதுடன், மாணவர்கள் அனைவரும் உரிய சுகாதார படிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏதேனும் ஒரு பரீட்சை நிலையத்தில் கொரோனாத் தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டால் அதற்கான மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பரீட்சை நாட்களில் மாணவர்களுக்கு தேவையான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கான பேச்சுகள் தற்சமயம் இடம்பெறுகின்றன எனவும் கல்வி அமைச்சர் கூறியுள்ளார்.

கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையை நடத்துவதற்கு ஏதுவாக அனைத்து பாடசாலைகளுக்கும் கடந்த வியாழன் முதல் விடுமுறை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

## 22.02.2020 தொடக்கம் 26.02.2021 வரையிலான சந்தையில் முக்கிய பயிர்களின் விலை நிலைவரம் ஒரே பார்வையில்!

### தம்புள்ள, Pettah, சந்தையின் விலை நிலைவரம்

22.02.2021 தொடக்கம் 26.02.2021 வரையான காலப்பகுதியில் பெற்றா, தம்புள்ள சந்தைகளில் தேசி, உள்ளூர் சிவப்பு வெங்காயம், பெரிய வெங்காயம், தேங்காய், கோவா, தக்காளி, போஞ்சி, கரட், கத்தரி, பூசணி, பச்சை மிளகாய், பப்பாளி, அன்னாசி போன்ற பயிர்களின் விலைகளில் தளம்பல்நிலை அவதானிக்கப்பட்டது. இதனால் இவை முக்கிய கவனத்துக்குரிய பயிர்களாக இருந்தன.

01. யதவத்தா மற்றும் மந்தரம்நுவர பகுதிகளிலிருந்து குறைந்த வழங்கல் அல்லது சாதகமான வழங்கல் காரணமாக பெற்றா, தம்புள்ள சந்தைகளில் போஞ்சி விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

02. நுவரலியா, கந்தபோலா ராகலா பகுதிகளிலிருந்து குறைந்த வழங்கல் அல்லது சாதகமான வழங்கல் காரணமாக பெற்றா, தம்புள்ள சந்தைகளில் கேரட்டின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

03. யாழ்ப்பாணம், புத்தளம், தம்புள்ளயை அண்டிய பகுதிகள் மற்றும் நொச்சியகம பகுதிகளில் இருந்து குறைந்த வழங்கல் காரணமாக அல்லது சாதகமான வழங்கல் காரணமாக பெற்றா, தம்புள்ள சந்தைகளில் பச்சை மிளகாயின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

04. மொனராகல, பதியதலாவ மற்றும் பிபிலி பகுதிகளில் இருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாக பெற்றா, தம்புள்ள சந்தையில் தேசி விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

05. கலென்பிந்துநுவேவா பகுதியில் இருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் பெற்றா, தம்புள்ள சந்தைகளில் பூசணிக்காயின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

06. புத்தளம், யாழ்ப்பாணத்திலிருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாகவும் இறக்குமதி செய்யப்பட்ட வகைகள் கிடைக்காமையாலும் தம்புள்ள சந்தையில் உள்ளூர் சின்ன வெங்காயத்தின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

07. மராசன மற்றும் நவுல பகுதிகளிலிருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நரஹன்பிடா சந்தைகளில் கத்தரி விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

08. குலியபிட்டிய, குருநாகல் மற்றும் மெல்சிரிபுரா பகுதிகளில் இருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நரஹன்பிடா சந்தைகளில் தேங்காயின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

09. தம்புள்ளயை அண்டிய பகுதிகளில் இருந்து குறைந்த வழங்கல் அல்லது சாதகமான வழங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நாரஹன்பிடா சந்தைகளில் தக்காளியின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

10. பாகிஸ்தானில் இருந்து குறைந்த மற்றும் உயர்தர வகை பெரிய வெங்காயம் கிடைப்பதால் இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயத்தின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

11. நுவரலியா, ராகல பகுதிகளில் இருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நரஹன்பிடா சந்தைகளில் உள்ளூர் கோவா விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

12. ஹபரன பகுதிகளிலிருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நரஹன்பிடா சந்தைகளில் பப்பாளி விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

13. வெண்ணப்புவ பகுதிகளிலிருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நரஹன்பிடா சந்தைகளில் அன்னாசி விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

14. யாழ்ப்பாணம், வெலிமட மற்றும் நுவரலியா பகுதிகளிலிருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நரஹன்பிடா சந்தைகளில் உள்ளூர் உருளைக்கிழங்கு விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

### Pettah சந்தை மொத்த விலைகள்

| | 22.02.2021 | 23.02.2021 | 24.02.2021 | 25.02.2021 |
|---|---|---|---|---|
| போஞ்சி | 120 | 120 | 110 | 130 |
| கேரட் | 118 | 80 | 80 | 180 |
| கோவா | 90 | 77 | 80 | 90 |
| தக்காளி | 247 | 250 | 231 | 220 |
| கத்திரிக்காய் | 50 | 55 | 45 | 55 |
| பூசணி | 110 | 100 | 151 | 80 |
| புடலங்காய் | 75 | 65 | 70 | 60 |
| பச்சை மிளகாய் | 300 | 300 | 281 | 250 |
| தேசி | 81 | 77 | 75 | 79 |
| சின்ன வெங்காயம் உள்ளூர் | 316 | 315 | 300 | 300 |
| சின்ன வெங்காயம் (இறக்குமதி) | 240 | 270 | 270 | 260 |
| பெரிய வெங்காயம் (உள்ளூர்) | | | | |
| பெரிய வெங்காயம் (இறக்குமதி) | 175 | 125 | 140 | 130 |
| உருளைக்கிழங்கு உள்ளூர் | 110 | 128 | 120 | 118 |
| உருளைக்கிழங்கு இறக்குமதி | 125 | 103 | 121 | 101 |
| உலர்ந்த மிளகாய் (இறக்குமதி) | 430 | 490 | 492 | 520 |
| தேங்காய் (சராசரி) | | | | |

### தம்புள்ள சந்தை மொத்த விலைகள்

| | 22.02.2021 | 23.02.2021 | 24.02.2021 | 25.02.2021 |
|---|---|---|---|---|
| போஞ்சி | 105 | 140 | 115 | 128 |
| கேரட் | | 115 | 115 | 155 |
| கோவா | 68 | 75 | 72 | 55 |
| தக்காளி | 195 | 195 | 195 | 185 |
| கத்திரிக்காய் | 58 | 45 | 38 | 53 |
| பூசணி | 78 | 70 | 74 | 65 |
| புடலங்காய் | 95 | 85 | 68 | 65 |
| பச்சை மிளகாய் | 255 | 278 | 255 | 315 |
| தேசி | 78 | 85 | 68 | 95 |
| சின்ன வெங்காயம் உள்ளூர் | 198 | | 220 | 198 |
| சின்ன வெங்காயம் (இறக்குமதி) | 128 | 228 | 225 | 198 |
| பெரிய வெங்காயம் உள்ளூர் | | | | |
| பெரிய வெங்காயம் இறக்குமதி | 108 | 103 | 118 | 125 |
| உருளைக்கிழங்கு உள்ளூர் | | 133 | 108 | 108 |
| காய்ந்த மிளகாய் இறக்குமதி | | 498 | | 490 |
| தேங்காய் சராசரி | 79 | 77 | 75 | 68 |

### தம்புள்ள சந்தை சில்லறை விலைகள்

| | 22.02.2021 | 23.02.2021 | 24.02.2021 | 25.02.2021 |
|---|---|---|---|---|
| போஞ்சி | 125 | 198 | 135 | 148 |
| கேரட் | | 135 | 135 | 175 |
| கோவா | 88 | 95 | 93 | 75 |
| தக்காளி | 215 | 215 | 215 | 205 |
| கத்திரிக்காய் | 78 | 65 | 58 | 73 |
| பூசணி | 98 | 90 | 98 | 85 |
| புடலங்காய் | 115 | 105 | 88 | 85 |
| பச்சை மிளகாய் | 275 | 298 | 315 | 335 |
| தேசி | 98 | 105 | 88 | 115 |
| சின்ன வெங்காயம் (உள்ளூர் | 208 | | 238 | 208 |
| சின்ன வெங்காயம் (இறக்குமதி) | 238 | 238 | 240 | 208 |
| பெரிய வெங்காயம் (இறக்குமதி) | 118 | 113 | 128 | 135 |
| உருளைக்கிழங்கு (உள்ளூர்) | | 143 | 118 | 118 |
| தேங்காய் (சராசரி) | 84 | 82 | 84 | 73 |

### தம்புள்ள சந்தை பழங்கள் மொத்த விலைகள்

| பழங்கள் | 22.02.2021 | 23.02.2021 | 24.02.2021 | 25.02.2021 |
|---|---|---|---|---|
| வாழைப்பழம் | 45 | 45 | 53 | 43 |
| பப்பாசி | 43 | 48 | 55 | 38 |
| அன்னாசி | 83 | 98 | 78 | 83 |
| ஆப்பிள் (இறக்குமதி) | 44 | 44 | 44 | 44 |
| ஆரஞ்சு (இறக்குமதி) | 55 | 55 | 55 | 55 |

### தம்புள்ள சந்தை பழங்கள் சில்லறை விலைகள்

| பழங்கள் | 22.02.2021 | 23.02.2021 | 24.02.2021 | 25.02.2021 |
|---|---|---|---|---|
| வாழைப்பழம் | 65 | 65 | 73 | 63 |
| பப்பாசி | 63 | 68 | 75 | 58 |
| அன்னாசி | 103 | 118 | 98 | 103 |



ர.ராஜீவன் - விவசாய பட்டதாரி

## ஜெனிவா நெருக்கடியில்

# இலங்கையை நிர்க்கதியாக இந்தியா கைவிடக் கூடாது!

## வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கொலம்பகே கொழும்பில் இறைஞ்சல்



கொழும்பு,பெப்ரெவரி 27

“ஜெனிவா நெருக்கடியில் எமது அயல்நாடான இந்தியா, ‘அங்குமில்லை, இங்குமில்லை’ என்ற பாணியில் பங்கேற்காமைப் போக்கைப் பேணாமல், முழு ஈடுபாட்டுடனும், ஆக்கபூர்வமாகவும் எங்களுக்கு ஒத்துழைத்துச் செயற் படவேண்டும். இலங்கையை நிர்க்கதியாக இந்தியா கைவிட்டு விடக்கூடாது.

– இவ்வாறு இறைஞ்சுகின்றார் இலங்கையின் வெளிவிவகார அமைச்சுச் செயலாளர் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ஜெயநாத் கொலம் பகே.

கொழும்பில் வைத்து இந்தியாவின் ‘த ஹிண்டு’ நாளிதழுக்கு அளித்த விசேட செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

இலங்கை விடயம் விரைவில் ஜெனிவாவில் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் வாக்கெடுப்புக்கு வர இருக்கின்றது. அச்சமயம் எமது உடனடி அயல் தேசமான இந்தியா, எங்களை நிர்க்கதியாகக் கைவிட்டு விடமுடியாது – என்றார் அவர்.

ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் அண்மையில் உரையாற்றிய இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், முழு உலகத்தையும் ஒரு குடும்பம் என்று குறிக்கும் விதத்தில் ‘வஸுதைவ குடும்பகம்’ என்று தெரிவித்திருந்தார்.

அதைச் சுட்டிக்காட்டிய கொலம்பகே, “உங்கள் வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டமைபோல முழு உலகமும் ஒரு குடும்பம் என்றால், நாங்கள் உடனடியாக உங்கள் பக்கத்துக் குடும்பம், அப்படியல்லவா?” எனக் கேள்வி எழுப்பினார்.

“இலங்கைக்கு அருகில் உள்ள அயல் தேசங்களான இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், பங்களாதேஷ் எல்லாம் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் அங்கத்துவ நாடுகள். கொவிட் 19 நெருக்கடி, மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் என்று அவை எதிர்கொள்ளும் பிரச்சினை களும் ஒரே மாதிரியானவை. எனவே அவை எல்லாம் ஜெனிவாவில் இலங்கையை ஒன்றுபட்டு நின்று ஆதரிக்க வேண்டும். ஆதரிக்கும் என எதிர்பார்க்கிறோம். எமது பிராந்திய நாடுகள் எம்மை ஆதரிக்கா விட்டால் அது எமக்கு பெரும் அசௌகரியமாகி விடும்.

“எங்கள் ஜனாதிபதியின் (கோட்டாபய ராஜபக்ஷவின்) ஆதரவு கோரும் முதல் கடிதம் இந்தியப் பிரதமருக்குத்தான் அனுப்பப்பட்டது. இந்த விடயத்தில் இந்தியத் தூதருடன்தான் முதல் சந்திப்பை அவர் மேற்கொண்டார். அதற்கு முக்கிய காரணம் இது விடயத்தில் தென்னாசியாவின் ஐக்கியம் குறித்து நாங்கள் அதிக சிரத்தை கொண்டுள்ளோம்.

“இலங்கை தனது அண்டை நாடுகளின் ஆதரவை அவசியமாகத் தேடி வேண்டி நிற்கின்றது. நாங்கள் விசேடமாக எதையும் கோரவில்லை. இந்தப் பிராந்தியத்தில் எல்லோருடைய (எல்லா நாடுகளினுடைய) பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி ஒரு முகமாக இருக்க வேண்டும் என்ற அயலுறவுக் கொள்கையின் ஆரம்ப அம்சத்தின் அடிப்படையிலான பங்களிப்பையே உரிமையுடன் எதிர்பார்க்கின்றோம்.” என்றார் அவர்.

வக்கெடுப்பில் இந்தியா பங்குபற்றாமல் விடுவது, இலங்கைக்கு ஆதரவானதாக அமையுமா என்று கேட்கப்பட்ட போது –

“நாங்கள் இந்தியாவின் முழு ஈடுபாட்டுடனான ஆக்கபூர்வமான பங்களிப்பை எதிர்பார்க்கின்றோம், பங்குபற்றாமல் விடுவதன் மூலமான ‘அங்குமில்லை, இங்குமில்லை’ என்ற நிலைப் பாட்டையல்ல” – என்றார் அவர்.

மோசமான – இலங்கைக்கு எதிராகக் காட்டமான – பிரேரணை ஒன்றைத் தோற்கடிப்பது சாத்தியமற்றது என்பதை அவர் ஒப்புக் கொள்கின்றார்.

“ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் இரட்டை வேடம் மற்றும் பாசாங்குத்தனமான போக்குக்கு மத்தியில் தென் கோடி நாடு ஒன்று இத்தகைய பிரேரணையை வெற்றி கொள்வது மிகவும் இயலாத காரியம்” – என்றார் அவர்.

“இத்தகைய தீர்மானம் ஒன்றின் பின்னர் வரக்கூடிய பொருளாதாரத் தடை போன்ற தண்டிப்பு நடவடிக்கைகள் நாட்டை விட மக்களையே அதிகம் நெருக்கடியில் ஆழ்த்தும்” என்று குறிப்பிட்ட அவர், நல்லிணக்கம் நாட்டுக்குள், நாட்டு மக்கிளிடையே இருந்து ஏற்பட வேண்டுமே தவிர, வெளியில் இருந்து அதனைத் திணிக்க முடியாது என்ற சாரப்படவும் கருத்து வெளியிட்டார். (உ)

# சுன்னாகத்தில் சிறுவர் விளையாட்டால் தன்பாட்டில் தறிகெட்டு ஓடிய டோஸர்!

## வேலிகள், தூண்கள், மரங்களை இடித்துத் தகர்த்தது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,பெப்.27

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் வீதியோரம் தரித்து நின்ற டோஸர் வாகனத்தில் சிறுவர்கள் ஏறி விளையாடிய சமயம் இயங்கத்தொடங்கிய டோஸர் அருகில் இருந்த வேலிகள், தூண்கள், மரங்களை இடித்துத் தகர்த்தவாறு நகர்ந்து அருகில் இருந்த வீட்டிற்குள் புகுந்தது.

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் உள்ள ஒரு சிறு வீதியை அமைக்கும் நோக் கில் டோஸர் வாகனம் ஒன்று கடந்த 10 நாள்களாக நிறுத்தப்பட்டிருந்தது. நிறுத்தியிருந்த வாகனத்தில் இன்று மாலை 4 மணியளவில்சிறுவர்கள்சிலர்ஏறிவிளையாடியுள்ளனர். இதன்போது திடீரென வாகனம் இயங்கியுள்ளது. இதனால் சிறுவர்கள் வருகை தந்த துவிச்சக்கர வண்டிக்கு மேலால் ஏறியவாறு டோஸர் வீதியால் பயணித்துள்ளது.

டோஸரில் இருந்த நான்கு சிறுவர்களில் ஒருவர் அருகில் தொங்கிய ஆலமர விழுதைப் பற்றிப் பிடித்துத் தொங்கி, டோஸர் முன்நகர்ந்ததும், மர விழுதில் இருந்து இறங்கித் தப்பிக் கொண்டார்.

அதனை நிறுத்த தெரியாத மற்றைய மூன்று சிறுவர்களும் டோஸருக்கு மேலிருந்தபடி அவலக்குரல் எழுப்பிய சமயம் வீதியோரம் ஒரு வீட்டின் தூண் வேலிகளைத் தகர்த்துக்



கொண்டு முன்நகர்ந்த டோஸர் வளவில் இருந்த தோட்டத்தின் ஊடாக வேலிகளை பிய்த்துக்கொண்டு தொடர்ந்தும் முன்னேறியது. இதன் போது அந்த வீட்டில் இருந்த சிலர் வீட்டின் முற்றத்தில் இருந்து பதறியடித்து தப்பியோட முயன்றனர்.

தன்பாட்டில் இயங்கிய டோஸர் வீட்டின் வளவில் நின்ற தென்னையுடன் மோதிய சமயம் வீதியால் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் ஓடிவந்து டோஸரில் ஏறி வாகனத்தை நிறுத்தியமையினால் தெய்வாதீனமாக உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டன. இந்த விபத்துக்கள் தொடர்பில் சுன்னாகம் பொலிஸாரிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து டோஸர் உரிமையாளர், காணி உரிமையாளர் மற்றும் டோஸரில் ஏறிய சிறுவர்கள் அனைவரும் சுன்னாகம் பொலிஸிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

# இலங்கைக்கு எதிரான பிரேரணை நிச்சயம் தோற்கடிக்கப்பட்டே தீரும்

## அமைச்சர் கெஹலிய நம்பிக்கை

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மான வரைவு நிச்சயம் தோற்கடிக்கப்படும். அதில் மாற்றுக் கருத்துக்கள் எதுவும் இல்லை.

- இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டார் இலங்கை அரசின் அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46ஆவது அமர்வு ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இலங்கை தொடர்பான விவகாரம் கடந்த 2 நாட்களாக ஆராயப்பட்டிருந்தன. இதில் இலங்கைக்கு ஆதரவாக சுமார் 21 நாடுகள் கருத்துக்களை வெளியிட்டிருந்தன. சில நாடுகள் நடுநிலைப் போக்கை வெளியிட்டிருந்தன. 15 நாடுகள் எதிர்த்திருந்தன.

இந்தநிலையில் இது தொடர்பில் அமைச்சர் கெஹலியரம்புக்வெலவிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரைவு நிச்சயம் தோற்கடிக்கப்படும். நட்பு நாடுகள் இலங்கைக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளன. அதிலும் குறிப்பாக சக்தி மிக்க நாடுகள் பிரேரணையைத் தோற்கடிப்பதில் உறுதியாக உள்ளன.

இலங்கையைப் பழிவாங்கும் வகையில் ஒரு சில நாடுகளின் சதித் திட்டங்களுடன் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனாலும், இலங்கை தொடர்பான நிலைப்பாட்டை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் தெட்டத் தெளிவாக எடுத்துரைத்துள்ளார்.



இதனைக் கருத்தில் எடுத்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகள் பிரேரணையை நிச்சயம் தோற் கடித்தே தீரும் - என்றார்.

இதேவேளை, இந்தியா, ஜெனிவாவில் வெளிப்படுத்திய நிலைப்பாடு தொடர்பில் இப்போது கருத்து எதனையும் கூற விரும்பவில்லை என்றும் கெஹலிய குறிப்பிட்டார்.

# உணர்ச்சிவசப்படாதவர் இப்படித்தான் இருப்பார்?

பெரும்பாலும் நேரந்தவறாமை என்ற ஒன்றே இருக்காது இவர்களிடம்.

உணர்ச்சிவசப்பட மாட்டார்கள். எப்படி இப்படி இருக்கிறார்கள் என்று நமக்கு ஆச்சரியமாக இருக்கும்.

அதே நேரம் கோபத்தில் எதிர்முனையில் இருப்பவரை கூட இலகுவாக சமாதானம் பண்ணிவிடுவார்கள்.

கஷ்டத்தை யாரிடமும் பகிர்ந்து கொள்ளவே மாட்டார்கள்.

எம் கண் முன்னே நிற்காதே, இனி என் வகுப்பிற்கு வந்தால் அவ்வளவு தான் என்று பேராசிரியர் திட்டும் போது இன்று காலை வரைக்கும் மருத்துவமனையில் அப்பாவுடன் இருந்துவிட்டு அப்படியே பாடசாலை வந்து விட்டேன் என்ற உண்மை சொல்லவே மாட்டார்கள்.

இவர்களை பார்த்து எவரும் பரிதாபப்பட்டுவிடக் கூடாது என்ற கொள்கையில் மிகவும் வைராக்கியமாக இருப்பார்கள். பெரும்பாலும் அறிவுரை பண்ண மாட்டார்கள். இவர்களிடம் இருக்கும் நல்ல விடயம் எந்த மனிதர்களையும் குறை கூற மாட்டார்கள்.

உணர்ச்சிவசப்படாதவர்களில் பலர் ஒரே ஒரு நாய் வளர்த்து அதனுடனே பொழுதை கழிப்பார்கள்.

மனிதர்களுடன் பழகுவதை விட விலங்குகள் பறவைகளுடன் பழகுவது இவர்களின் தேர்வாக இருக்கும்.

ஆண்களாக இருந்தால் அந்த நாலு முழம் வேட்டியும் பெண்களாக இருந்தால் பாவாடையும் வீட்டுக்கு அணிவது இவர்களுக்கு பிடிக்கும்.

இந்த உணர்ச்சிவசப்படாதவர்களில் பாதி பேர் தனியாக தான் தேநீர் குடிக்க போவார்கள்.

மூன்று நாளைக்கு விடுமுறை செய்திருப்பதை, கூடவே இருக்கும் யாரிடம்கூட சொல்ல மாட்டார்கள்.

மூன்று நாள் கழித்து வந்து திருமணம் நிச்சயம் ஆகிவிட்டது என்று சொல்லுவார்கள் இதை கூட சும்மா போற போக்கில் சொல்லிவிட்டு யாரிடமும் சொல்லாதே என்றும் சொல்லிவிட்டு போவார்கள்.

நண்பனின்திருமணத்துக்கு வந்துவிட்டு சொல்லாமல்சென்று விடுவார்கள். டேய் மண்டபத்துல ஆள காணம் எங்கடா இருக்கே என்று கேட்டால், மச்சான் செம தலைவலிடா வீட்டுக்கு வந்துவிட்டேன் என்பார்கள்.

ஆனால் குரூப் போட்டோவில் மட்டும் கண்டிப்பாக தலையை காண்பித்து விடுவார்கள். நன்றாக கவனித்து பாருங்கள், குரூப் போட்டோவில் அவர்கள் மட்டும் சரியாக கமராவை பார்த்து இருப்பார்கள், கண்ணை சிமிட்டி இருக்க மாட்டார்கள், தலையை குனிந்து தொங்க போட்டிருக்க மாட்டார்கள்.

டேய் எப்படிடா நீ மட்டும் எல்லா குரூப் போட்டோவிலும் அருமையாக இருக்கிறாய் என்று எங்கள் குரூப்பில் ஒருத்தனை கேட்போம் அல்லவா அவன்



தான் அந்த உணர்ச்சிவசப்படாத நண்பன்.

ஆறு மணி நேரம் ஒரே இடத்தில் உட்கார்ந்து வீடியோவை எடிட் பண்ண சொன்னால் கூட அசராமல் உட்கார்ந்து செய்வதில் கில்லாடிகள்.



# நிதானமாக இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?

ஒன்றும் மனதிற்குள் செல்லாமல் ஒரு பார்வையாளராய் பார்க்க கற்றுக்கொள்ளுங்கள்.

ஒரு சீரியல் பார்க்கும்பொழுது டிவி திரையில் உங்களை பார்த்து ஒருவர் திட்டினால் நீங்கள் கோபம் கொள்கிறீர்களா?

உங்கள் எதிரியை யாரும் திட்டினால் கோபம் கொள்கிறீர்களா?

உங்கள் எதிரியிடம் நியாயம் இருந்தாலும், அவர் திட்டு வாங்கும் அந்த சமயத்தில் நீங்கள் மனதுக்குள் சந்தோஷப்படுகிறீர்களே தவிர அவருக்காக ஆதரவு செய்து வாதாடுகிறீர்களா? இல்லையே.

மற்றவர்கள் என்னதான் பேசினாலும் அதற்கு எதிர்வினை ஆற்றவேண்டிய அவசியமில்லை.

யாரோ யாரையோ பார்த்து சொல்கிறார் என்று நினைத்துக்கொண்டு, அவர்கள் நிலையில் நாம் இருந்தால் நாமும் அப்படித்தான் நினைத்திருப்போம் என்று நினைத்து, அதில் உள்ள உண்மைகளை மட்டும் உள்வாங்கி, அவற்றில் நியாயம் இருந்தால் நம்மை திருத்திக்கொள்ளலாம்.

நம் பக்கம் நியாயம் இருந்தால், அவர்கள் அமைதியாகும் வரை காத்திருந்து பின் நயமாக, அதில் உள்ள நன்மை, தீமை, பின்விளைவுகளை எடுத்து சொல்லலாம்.

அதற்கு பிறகும் அவரவர் (உங்களையும் சேர்த்து) பிரச்சினைகளுக்கு அவரவர்களே காரணம் என்பதை உணர்ந்து அவற்றை சரி செய்ய முயலுங்கள்.

# உங்களை உணருங்கள்




பிறக்கும் போது பலரை சிரிக்க வைத்து இறக்கும் போது பலரை அழ வைக்கிறோம்! நமக்கென எதுவும் இல்லாமல் இந்த உலகில் பிறக்கிறோம் அதே நிலைமையில் இருக்கிறோம்!

முதலில் பணத்திற்காக ஆரோக்கியத்தையும் பின்பு ஆரோக்கியத்திற்காக பணத்தையும் இழக்கிறோம்!

பணம்இல்லையென்றால்வயிற்றைநிறைக்க ஓடுகிறோம், பணம் இருந்தால் வயிற்றை குறைக்க ஓடுகிறோம்!

பிறரை மகிழ்வித்து நமது மகிழ்ச்சியை தொலைக்கிறோம்!

பல விடயங்களை தொலைத்த பின்னரே தேட ஆரம்பிக்கிறோம்!

பணத்திற்காக பாசத்தையும் பின்பு பாசத்திற்காக பணத்தையும் இழக்கிறோம்!

எதிர்பார்ப்புகளுடன் வாழ்ந்தே ஏமாந்து போகிறோம்!

எதிர்காலத்தை பற்றி சிந்தித்தே நிகழ்காலத்தை இழக்கிறோம்!

ஆடம்பரத்திற்காக அத்தியாவசியத்தை இழக்கிறோம்!

பிறரை வீழ்த்துவதாக நினைத்து நாமே வீழ்ந்து விடுகிறோம்!

பிறரைமேன்மைபடுத்தியேநம்மைதாழ்மைபடுத்தி விடுகிறோம்!

மற்றவர்களுக்காக வாழ நினைத்து நம் வாழ்க்கையை தொலைத்து விடுகிறோம்!

நாலு காசு சம்பாரிக்கணும் என ஓடியே கடைசியில் நாலு கால் நாற்காலியில் உக்கார வைக்க படுகிறோம்!

# வாழ்க்கையில் எந்த முன்னேற்றமும் இல்லாமைக்கு காரணம் என்ன?

காட்டுக்கு நடுவில் ஐந்துபேர் வழிதவறி மாட்டிக்கொள்கிறார்கள் .தொழில்நுட்பம் எதுவும் உதவிக்கு இல்லை .


எந்த திசையில் போவது என்று யோசித்த போது , அவரவருக்கு தோன்றியதுபோல போகிறார்கள் . ஒருத்தன் இடப்பக்கம், ஒருத்தன் வலப்பக்கம், ஒருத்தன் போய்க்கொண்ட்டிருந்த அதே திசையில், இன்னும் ஒருத்தன் வந்த வழியே திரும்பி போக முடிவு செய்கிறார்கள்.

குருட்டாம்போக்கு காரணங்களை எல்லோரும் ஒருவருக்கொருவர் சொல்லி அதன்படி பிரிந்து போகிறார்கள்

கடைசி ஆள் மட்டும் என்ன செய்வது என்று தெரியாமல் நிற்கிறான். பின்னர் நிதானமாக யோசித்து பார்க்கிறான். அறிவுபூர்வமா சிந்தித்து பார்க்கிறான். உயரமா இருக்கும் ஒரு மரத்தில் ஏறி சுற்று முற்றும் பார்க்கிறான். ஒரு திக்கில் ஏதோ கிராமம் இருப்பதுபோல தெரிந்தது . கூரைகள், புகை, ஒற்றையடிப்பாதை எல்லாம் தெரிந்தது, அந்த திக்கில் அவன் போகிறான்.

மற்றைய நான்கு பேரும் என்ன ஆனார்கள் என்று தெரியாமல் இவர் மட்டும்தான் சூப்பர் பேர்வழி என்று நாம் எல்லோரும் முடிவு பண்ணுவதுதான் எங்களுடைய பொதுவான குறைபாடு.

ஐந்தாவது ஆள் மட்டும்தான் உருப்பட்ட மனுஷன் என்று நாம் நினைக்க வேண்டியதுதான் . மற்றவனெல்லாம் வீணாப்போனவன் என்று முடிவு பண்ணி விடுவோம்.



வலதுபக்கம் போனவன் ஒரு அரிதான மூலிகையை கண்டு பிடித்தான்.

இடதுபக்கம் போனவன் ஒரு ஓநாய் கூட்டத்தில் மாட்டி தப்பிக்கொள்கிறான்.

வந்த வழி திரும்பி போனவன் தொலைந்து போன வேறு ஒரு குழுவைச் சந்திக்கிறான்; அவர்கள் வந்த பாதை, இவன் வந்து போன பாதை எல்லாவற்றையும் ஆராய்ந்து சரியாக முறையில வழி கண்டுபிடிக்கிறார்கள். சிறந்த நண்பர்களும் ஆகிறார்கள்.

நேரா போனவன் ஒரு பணக்கார குடும்பத்தை சந்திக்கிறான், இண்டு நாள் தங்கப்போவதாக கூறி தங்குகிறான், அந்த வீட்டுப் பெண்ணை பிடித்துப்போய் கல்யாணம் பண்ணி சுகபோகமாக வாழ்கிறான். இயற்கை விவசாயம் கற்றுக் கொடுக்கிறார் மாமனார்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று கிடைத்தது

ஆனால் நம்மட புத்திசாலி – மரத்தில் ஏறி வழி கண்டுபிடித்து அந்த கிராமத்துக்கு போய், தன்னுடைய ஊருக்கு/வீட்டுக்கும் பத்திரமா போய் சேர்ந்துவிடுகிறார்.

இந்த 'பத்திரமா வீடு போய் சேர்ந்ததைத்தான்' நாம் எல்லோரும் வெற்றி / முன்னேற்றம் அப்படி என்று நினைத்துக்கொண்டு இருக்கிறோம்.

எல்லோருக்கும் வாழ்க்கை வெவ்வேறானது. இங்கு முன்னேறாதவன் /தோற்றவன் என்று எவனுமே கிடையாது.

# மண்டைதீவுப் பங்கு மக்களின் நீண்டகாலக் கனவு நனவாகியது

## யாழ் ஆயருக்கு நன்றி தெரிவிப்பு



மண்டைதீவுப் பங்கு மக்களுடன் பணி செய்ய இறைவன் என்னை அழைத்த போது என் பணி மக்களின் ஆன்மீகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு அவர்களின் அடிப்படைக் கட்டுமானங்களை மீண்டும் கட்டி எழுப்பி மக்களை மீண்டும் எழுச்சி கொண்ட மக்களாக்கும் ஓர் பணி எனக்கு உண்டு என்று உணர்ந்தேன். இவ்வாறான ஒரு பணியைச் செய்ய அருட் சகோதரிகள் இந்தப் பங்கில் இருந்தால் இன்னும் இலகுவாக இருக்கும் என்று உணர்ந்து அதற்கான அனுமதியை ஆயரிடம் கேட்ட போது அதற்கான அனுமதியை ஆயர் மகிழ்வுடன் வழங்கினார். இந்த வேளையில் மண்டைதீவுப் பங்கு மக்களின் நீண்டகாலக் கனவை நனவாகிய யாழ் ஆயருக்கு நன்றி. – என தீவக மறைக்கோட்ட குருமுதல்வரும் மண்டைதீவு அல்லைப்பிட்டி பங்குத்தந்தையுமான மனுவேல்பிள்ளை டேவிட் அடிகளார் காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும்போது –

மண்டைதீவுப் பங்கானது யாழ் ஆயரின் இதயத்துக்கு மிக நெருக்கமான பங்காகும். அவருடைய பார்வையில் நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட இந்தப் பங்கானது யாழ். மறை மாவட்டத்திலும், தீவக மறைக்கோட்டத்திலும் ஓர் முன்னணிப் பங்காக இருக்கவேண்டும் என்பதே அவர் விருப்பமாகும். அந்த வகையில் யாழ். மேய்ப்புப்பணி மாநாட்டின் தீர்மானங்களை உடனேயும் முதலாவதாகவும் அமுல்படுத்திய கீழ்ப்படிவுள்ள ஒரு பங்கு என்ற பெருமையை மண்டைதீவுப் பங்கு யாழ். மறைமாவட்டத்தில் ஏற்படுத்தியது ஓர் அழகான ஆன்மீக வரலாறு ஆகும்.

இந்த வேளையில் சல்வற்றோறியன் அருட்சகோதரிகள் மண்டைதீவுக்கு வர துணையாக இருந்த அருட் சகோதரி வேஜினி அவர்களை நன்றியுடன் நினைவு கூருகின்றேன். இறைமீட்பர் சபை அருட் சகோதரிகள் மண்டைதீவில் தற்காலிகமாக இருப்பதற்கு தமது வீட்டைப் புனரமைத்து இதுவரை காலமும் அருட் சகோதரிகள் தங்குவதற்காக வழிசமைத்த பிரான்ஸில் வசிக்கும் திரு திருமதி சூசைதாசர் கிறேஸ் தம்பதியரையும் நன்றியோடு நினைவு கூருகின்றேன்.

இப்புதிய கன்னியர் மடம் அமைய தமது காணியை தமது கணவரின் நினைவாக உவந்தளித்த திருமதி பிலோமினம்மா மற்றும் அவரின் நான்கு பிள்ளைகளையும், இன்னும் இக்கன்னியர் மடம் உருவாக பண மற்றும் பொருள் உதவி செய்த உள்நாட்டு வெளிநாட்டு உபகாரிகளையும் நன்றியோடு நினைவு கூருகின்றேன்.

இறுதியாக இறைமீட்பர் சபை அருட் சகோதரிகளின் வருகை மண்டைதீவுப் பங்கின் வரலாற்றில் மிக முக்கியமான மைல் கல். அன்பார்ந்த இறைமீட்பர் சபை அருட்சகோதரிகளே! எங்கள் பிள்ளைகளை வளர்த்துக்கொள்ளுங்கள். ஆன்மீகத்திலும் கல்வியிலும் வளர்த்துக் கொள்ளுங்கள். எம் பங்கில் ஓர் புதிய சமூகம் மலர அர்ப்பணிப்புடன் பணி செய்யுங்கள். இதுவே இந்த அழகான கன்னியர் மடத்தில் இருக்கும் மக்களின் வியர்வையும், உழைப்பும், தியாகமும் உங்களுக்கு விடுக்கும் அன்போடு கூடிய அழைப்பாகும். சபையின் மாகாணத் தலைவி தனது பக்கத்தில் இதனை அழகாக எடுத்தியம்பியுள்ளார். உங்கள் பணி சிறக்க வாழ்த்துக்கள்.– எனத் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikathir

கிறிஸ்தவ செய்தி இதழ்

TCNL

உண்மையை எடுத்துரைப்பதே என் பணி – யோவா:18:37

ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்

# யாழ் ஆயரின் சகோதரர் கனடாவில் இறைபதம்



யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் சகோதரர் டொக்டர் கிறிஸ்ரி நவநீலன் ஞானப்பிரகாசம் (வயது 69) அவர்கள் திடீர் சுகவீனம் காரணமாக கனடா ஒட்டாவா வைத்தியசாலையில் பெப்ரவரி 25ஆம் திகதி இறைபதம் அடைந்தார் என்ற சோகச்செய்தியை காலைக் கதிர் கிறிஸ்தவ அன்பு நெஞ்சங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம். 24 செப்ரெம்பர் 1951 ஆம் ஆண்டு பிறந்த இவர் 25 பெப்பரவரி 2021 அன்று இறைபதம் அடைந்தார். அவரின் இறுதிச் சடங்குகள் 27 பெப்ரவரி 2021 அன்று வில்சன் இறுதிச் சடங்கு இல்லத்தில் ஆராதனையின் பின்னர் நடைபெற்றது.

இவரின் பிரிவால் அன்பு மனைவி டொக்டர் றாக்கேல், பிள்ளைகள் தனியா மற்றும் அன்ரனி மற்றும் உறவினர்கள் வேதனை அடைந்துள்ளனர்.

டொக்டர் நவநீலன் ஞானப்பிரகாசம் அவர்களின் ஆன்மா இறைவனின் இன்ப சன்நிதானத்தில் அமைதியில் இளைப்பாற இறைவரம் வேண்டுங்கள்.

# மண்டைதீவு பங்கின் வளர்ச்சிப் பாதையில் இன்னுமொரு அத்தியாயம் கன்னியர்மடம்



மண்டைதீவு மண்ணிலே கம்பீரமாகத் தோற்றம் அளிக்கும் பாதுகாவலராம் புனித பேதுருவானவருக்கு அர்ப்பணிக்கப்பட்ட புதிய ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டியதன் 125 ஆவது ஆண்டு யூபிலி விழாவை எதிர்வரும் 2022ஆம் ஆண்டு நிறைவு செய்து கொண்டாடவுள்ள வேளையில், இந்த அன்பிய ஆண்டில் மண்டைதீவுப் பங்கில் சல்வற்றோறியன் அருட்சகோதரிகள் மடம் ஒன்று புதிதாக உதயமாவது எமது பங்கின் ஒரு வரலாற்று பதிவாகும்.

சல்வற்றோறியன் அருட்சகோதரிகளைப் பொறுத்த வரை யாழ். மறைமாவட்டத்திலேயே முதன் முதலாக தமது பணிகளை ஆற்றுவதற்கு கடந்த 19.02.2018 அன்று மண்டைதீவு அல்லைப்பிட்டி பங்கைத் தேர்ந்து எடுத்து சிறிது காலம் அல்லைப்பிட்டியில் தங்கி தற்காலிகமாகப் பணி செய்துவிட்டுப் பின்னர் தமது பணியினை நிரந்தரமாக எமது மண்டைதீவு மண்ணில் ஆற்றுவதற்கு கடந்த 02.02.2019 இங்கு வருகை தந்தனர்.

01.08.2019 அன்று மண்டைதீவுப் பாதுகாவலரின் திருநாள் அன்று யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் கலாநிதி பீ.ஜே. ஜெபரட்ணம் அடிகளாரினால் அடிக்கல் நாட்டப்பட்டு துரிதகதியில் கட்டடப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு கீழ்த்தளம் முழுவதும் பூரணப்படுத்தப்பட்டு மேல் தளத்திற்கான கூரை வேலைகள் நடைபெற்றுவரும் இவ்வேளையில் அன்பிய ஆண்டிலே 14.02.2021 அன்று யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் திருக்கரங்களினால் அர்ச்சிக்கப்பட்டு ஆசீர்வதித்து திறந்து வைப்பது என்பது மண்டைதீவுப் பங்குமறைத்தளத்தின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயமாகும்.

இக் கட்டடப் பணியினை மேல்தளம் மற்றும் கீழ்த்தளம் உள்ளடங்கலாக பூரணமாகக் கட்டி முடிப்பதற்கு ரூபா ஒரு கோடி தொண்ணூறு லட்சம் (பத்தொன்பது மில்லியன்) உத்தேச மதிப்பீடாக கணக்கிடப்பட்டு வேலைகள் நடைபெற்று வரும் நிலையில் கட்டடப் பணியின் முதலாம் கட்டப் பணிகள் கீழ்தள முழுமையாக்கலில் நிறைவேற்றப்பட்டு, இதன் இரண்டாம் கட்டப் பணிகளையும் அதே வேகத்தில் தொடர்ந்து முன்னெடுத்து எதிர்வரும் எமது பாதுகாவலரின் திருநாளுடன் ஆரம்பமாகும் 125ஆவது யூபிலி ஆண்டின் தொடக்கத்தில் முழுமையாகக் கட்டி முடிக்கத் தீர்மானித்துள்ளோம். இக் கட்டடப் பணியினை முழுமையாக நிறைவேற்றி முடிக்க தங்கள் ஒவ்வொருவரினதும் ஒத்துழைப்பினையும் பங்களிப்பினையும் மீண்டும் தயவுடன் எதிர்பார்த்து நிற்கின்றோம். – என இந்நிகழ்வை ஒட்டி வெளியான நினைவு மலரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வற்றாப்பளை முல்லைத்தீவில் புனித லூர்தன்னையின் ஆலயம்




வற்றாப்பளை முல்லைத்தீவு புனித லூர்தன்னையின் ஆலயத்தை யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை திறந்து வைத்தார்.

ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் முல்லைத்தீவின் பங்குத்தந்தையாக இருந்த போது புதிய ஆலயத்திற்கான அடித்தளம் அவரது தலைமையில் மரியதாஸ் அடிகளாரால் 2007ஆம் ஆண்டில் இடப்பட்டது.

ஆனால் உள்நாட்டு போரின் காரணமாக மக்கள் இடம் பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் தவித்ததால் அந்த முயற்சி சாத்தியமற்றுப் போய்விட்டது. 2010ஆம் ஆண்டு மக்கள் வற்றாப்பளைக்கு மீள் குடியமர்ந்த பின் மீண்டும் ஆலயம் கட்டுவதற்கான முயற்சிகளை மக்கள் முன்னெடுத்தனர். 2015ஆம் ஆண்டு அப்போதைய முல்லைத்தீவின் பங்குத்தந்தை அன்ரனிப்பிள்ளை அடிகளார் புதிய ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டினார். இடம் பெயர்வு காரணமாக இறைமக்கள் ஆலயம் கட்ட போதுமான நிதி சேகரிக்க முடியாமல் இருந்த நேரத்தில் 2017ஆம் ஆண்டு ஜோர்ஜ் அடிகளாரின் ஊக்குவிப்பில் லண்டனுக்கு இடம்பெயர்ந்திருந்த சவரிமுத்து ஆசிரியரின் குடும்பத்தில் சுவாமிநாதர், திருமதி. ஜெயராணி அவர்களின் மகனாகிய றெக்ஸ் தேவகுமார் மற்றும் துணைவியார் பெருமளவில் நிதியுதவி செய்தார். அவரோடு இன்னும் சில நல்ல உள்ளங்களின் உதவியில் ஆலயம் ஏறத்தாழ ஆறு ஆண்டுகளின் நிறைவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டு ஜூன் மாதம் தூய ஜோசப் வாஸ் கப்புச்சின் மறைப்பணித் தளத்தைச் சேர்ந்த குருவான சார்லஸ் எப்ராயிம் அடிகள் கல்வி நிறுவனம் ஒன்று தொடங்குவதற்காக சிலாவத்தைக்கு வருகை தந்தார். அவர் சிலாவத்தையில் தூய அன்னம்மாள் ஆலய வளாகத்தில் தங்கி தங்கள் பணிகளை செய்து வந்தார். 2019ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5ஆம் நாள் முல்லைத்தீவு பங்கிலிருந்து சிலாவத்தை புதிய பங்காக உருவாக்கப்பட்டு கப்புச்சின் அருட்பணியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன் பின் வற்றாப்பளை சிலாவத்தையின் கிளைப் பங்குகளில் ஒன்றானது. சிலாவத்தைப் பங்கின் முதல் பங்குத்தந்தையாக அலெக்ஸ் மரிய செல்லையா அடிகளாரும் உதவிப் பங்குத் தந்தையாக சவேரியார் அடிகளாரும் பொறுப்பேற்றனர். 2020ஆம் ஆண்டிலிருந்து டேவிட் டொமினிக் சகாயம் அடிகளார் உதவிப் பங்குத் தந்தையாக பொறுப்பேற்றார். இந்தியாவிலிருந்து வந்த இந்தக் கப்புச்சின் அருட்பணியாளர்களின் வழிகாட்டலில் வற்றாப்பளை தூய லூர்து அன்னை ஆலயம் இன்று முழுமையடைந்து திறப்பு விழா காண்கின்றது. 02.02.2021 அன்று புதிய ஆலயம் யாழ் ஆயரால் திறந்து வைக்கப்பட்டது

## ஒடியல் மா தேவை

ஒடியல் மா மொத்தமாக கொள்வனவிற்கு தேவை.

**தொடர்புகளுக்கு 076 403 814**

## பனங்கிழங்கு தேவை

பனங்கிழங்கு மொத்த கொள்வனவுக்கு தேவை.

**தொடர்புகளுக்கு 076 011 7002**

## வீட்டுப் பணியாட்கள் தேவை

ஆண், பெண் இருபாலாரும்.

**தொடர்புகளுக்கு 077 435 0737**

## பழுது பார்த்து கொடுக்கப்படும்

சகல வகையான குளிர்சாதன பெட்டிகளும் பழுது பார்த்து கொடுக்கப்படும்

**தொடர்புகளுக்கு 077 654 8613**

## மஞ்சள் கன்று விற்பனைக்கு

1 1/2 மாத மஞ்சள் கன்று விற்பனைக்கு உண்டு. வீட்டிற்கு எடுத்து வந்து தரப்படும்.

**தொடர்புகளுக்கு 021 492 7778**

## இஞ்சி கன்று விற்பனைக்கு

தரமான இஞ்சி கன்று விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு 021 492 7778**

சி.சி.ரீ.வி கமரா பொருத்துதல், பராமரித்தல் மற்றும் முதற்தர கமராக்களை வாங்குவதற்கு அணுகவும்.

**தொடர்புகளுக்கு 077 473 6057**

* உங்கள் அடகு நகைகளை மீட்க உதவுவோம்.
* பழைய நகைகள் கூடிய விலையில் வாங்கப்படும்.

**021 222 2552**

டி ராக்டர் பெட்டி தேவை முச்சக்கர வாகனம் தேவை.

**தொடர்புகளுக்கு 076 7403814**

தனியார் நிறுவனத்திற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

**தொடர்புகளுக்கு 076 7403814**

நண்பர்கள் தேவை
நான் புது நண்பர்களை அறிமுகமாகி நட்புக் கொள்ள ஆவலாக இருக்கின்றேன்.
Mohamed Irfan

**தொடர்புகளுக்கு 077 967 4910**

## காணி தேவை

யாழ் நகரில் இருந்து மருதனார் மடத்திற்கு இடைப்பட்டதாக K.K.S வீதியால் வீதியோரத்தை அண்மித்தாக காணி தேவை.

**தொடர்புகளுக்கு:- 076 339 8819
077 951 4699**

## மணமகள் தேவை

பிறந்த திகதி - 27. 10.1990
மதம் - இந்து V
நட்சத்திரம் - திருகோணம்.
கி.பா - 30
சூரி/ செவ் - 7 இல்
தகைமை - B.A.
தொழில் - Development Office
எதிர்பார்ப்பு - Bank Manager or Engineer மணமகள்

**தொடர்புகளுக்கு 077 197 1667**

## மணமகன் தேவை

பிறந்த திகதி - 07.12.1991
மதம் - இந்து V
நட்சத்திரம் - மூலம் 5'6'
கி.பா - 27
சூரி/ செவ் - 12
தகைமை - B.B.A.
தொழில் - Management Assitant
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன்.

**தொடர்புகளுக்கு 077 197 1667**

## திருமண சேவை

யாழ் இந்து கிறிஸ்தவ ஜாதகங்கள் உண்டு. உள்நாடு வெளிநாடுகளில் உள்ளவர்கள் பொருத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு: 077 621 3832
Email: thiriChelvam1964@gmail.com**

உங்களுக்கு தேவையான மருந்து வகைகளை பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய இடம்.

**தொடர்புகளுக்கு: 021 221 7353**

பெண்களுக்கான திருமண வைபவ சாறி பிளவுஸ்களுக்கு ஆரிவேர்க் செய்து கொடுக்கப்படும்.

**தொடர்புகளுக்கு:- 077 332 1937
076 610 9770**

பழைய நகைகள் கூடிய விலைக்கு கொள்வனவு செய்யப்படும், தகுந்த ஆவணங்களுடன் வருகை தரவும்.

**தொடர்புகளுக்கு:- 076 804 6048
திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி**

அரச அங்கீகார முத்திரையிடப்பட்ட நிறுவை தராத வகைகள் மற்றும் மின்வலு உபகரணங்கள் யாவும் நிஜாய விலையில் உத்தரவாதத்துடன் கிடைக்கும்

**தொடர்புகளுக்கு:- 021 222 6234
இல.29, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்**

உங்களுக்கு தேவையான மொபைல்போன் வகைகளை பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்.

**தொடர்புகளுக்கு 076 127 6791
நல்லூர் கோவில் முன்பாக**

## வீடு, காணி விற்பனைக்கு

* கோண்டாவிலில் வீடு விற்பனைக்கு 2.5 பரப்பு
* கஸ்தூரியார் வீதி ஓரமாக கடையுடன் வீடு விற்பனைக்கு 1 பரப்பு.
* கொடிகாமம் வீடு விற்பனைக்கு 4 பரப்பு 11.5 குழி.
* பொன்னாலை வீதியில் கடற்கரையோரமாக காணி விற்பனைக்கு 34 பரப்பு.
* கே.கே.எஸ் கடற்கரையோரமாக காணி விற்பனைக்கு 7 பரப்பு.
* முடமாவடி கோவில் வீதியோரமாக காணி விற்பனைக்கு 1.5 பரப்பு

Re/max

**தொடர்புகளுக்கு 077 566 0000**

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை ஆஸ்பத்திரி பிரதான வீதிக்கு அண்மையில் 2.5 பரப்பு காணி விற்பனைக்கு ஒரு பரப்பு 18 லட்சம்

**தொடர்புகளுக்கு 070 431 7660**

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி ஐந்து சந்தியில் 1 1/2 பரப்பு காணி விற்பனைக்கு

**தொடர்புகளுக்கு 077 43 22836**

## கடை வாடகைக்கு

ஆஸ்பத்திரி வீதிக்கும் கோவில் வீதி சந்திக்கும் இடையில் (10x12 SQ ft) கடை வாடகைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு:-077 020 7073**

யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியில் கடைத்தொகுதி வாடகைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு:- 077 477 9443
076 141 9299**

மானிப்பாய் வீதி ஐந்து சந்தியில் கடை தொகுதி வாடகைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு:- 077 354 7789**

கோப்பாய் (யாழ் பருத்தித் துறை வீதி நாவலர் பாடசாலை அருகில்) ஆசிரியர் கலா சாலைக்கு அண்மையில் பெண்களுக்கான தனி அறைகள் வாடகைக்கு உண்டு (பெண்களுக்கு மட்டும்)

**தொடர்புகளுக்கு 070 564 0975**

## தவறிவிட்டது

எனது அடையாள அட்டை(930190241A) சாரதி அனுமதிப்பத்திரம் வாகனவரி காப்புறுதி பத்திரம் என்பவற்றை 25022021 காலை யாழ் நகர் பிரதான வீதியில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:- 0771624495**

## வாகன விற்பனை

### ஓட்டோக்கள் விற்பனைக்கு

1. Bajaj 2004 2 Stroke 5,20,000/=
2. Bajaj 2019 4 Stroke 11,50,000
3. Bajaj 2006 2 Stroke 6,50,000
4. Bajaj 4 Stroke 2016 9,50,000
5. Bajaj 2 Stroke 2005 5,50,000

**தொடர்புகளுக்கு: 077 403 9609
021 221 4849**

01. 150 பல்சர் பஜாஜ் 2015 விலை 2,50,000/=
02. CD 110 Honda 2017 விலை 1,80,000/=
03. Hero Passion Pro 2019 விலை 2,75,000/=
04. Hero Deluxe 2020 விலை 3,00,000/=
05. TVS Wego 2018 விலை 2,70,000/=
06. Honda Dio 2016 விலை 2,50,000/=
07. Honda Aviator 2019 விலை 3,00,000/=
08. Yamaha FZ 2017 விலை 3,90,000/=
09. Yamaha Facino 2016 விலை 2,40,000/=
10. KTM 200 2019 விலை 6,35,000/=
11. Hero Dash 2017 விலை 1,70,000/=

**விலைகள் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.**

**தொடர்புகளுக்கு 077 492 7036
077 625 2537**

# நாயைப் பொலிஸார் சுட்டபோது வயோதிபர் தவறுதலாகக் காயம்

## தெற்கு களுத்துறைப் பகுதியில் சம்பவம்



தெற்குகளுத்துறைபொலிஸ் நிலைய அதிகாரியொருவரால் ரேபிஸ் நோய் கொண்ட நாய் ஒன்றின் மீது மேற்கொள்ளப் பட்ட துப்பாக்கிச் சூடு அருகில் இருந்த நபரொருவர் மீது பட்டதில் அந்த நபர் காயமடைந்துள்ளார் எனத்தெரிவிக்கப்படுகிறது.

அந்த நாய் அப்பிரதேசத்தைச் சேர்ந்த பத்துக்கும் அதிகமானோரைக் கடித் துள்ளதாகப் பொலி ஸாருக்கு முறைப்பா டொன்று கிடைக்கப்பெற்றுள்ளது.

அதன்படி, நேற்றுக் காலை 10.30 மணியளவில் ரேபிஸ் நோய்த் தொற்றுக் கொண்ட நாய் தெற்கு களுத்துறை, வெட்டுமகட பிரதேசத்தில் உள்ளதாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய பொலிஸார் உடனடியாக அந்தப் பிரதேசத்திற்கு விரைந்துள்ளனர்.

இதன்போது, மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அந்நாய் அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளதாக செய்தியாளர் தெரிவித்தார்.

அங்கிருந்த நபரொருவர் மீதும் துப்பாக்கிச் சூடு தவறுதலாக பட்டதால் காயமடைந்த 60 வயதுடைய அந் நபர் களுத்துறை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் தெற்கு களுத்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## சீட்டிழுப்புக்கள்

யாழ் வெற்றி முகவர் கனகலிங்கம் திலகவதி மூலம் சம்பத் ராசி வரம் பரிசு சீட்டில் ஒரே நாளில் இரு வெற்றியாளர்களும் (5 லட்சம்) அத்தோடு நேற்று சீட்டிழுக்கப்பட்ட மஹஜன சம்பத்தில் லட்சாதிபதி ஒருவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

**தொடர்புகளுக்கு
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் (அன்னை நாகா பூட்சிற்றி முன்பாக) மற்றும் பஸ் நிலைய, வைரவர் கோவில் பின்புறம்)
தொ.இல. 077 6483679**




## லக்ஷ்மி நாராயணா திருமண சேவை

**இல:- 266 பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.**
**தொ.பே. 077 197 1667
077 316 4796**

### மணமகன் விவரம்

பிறந்த திகதி - 1983.07.26 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - அவிட்டம் 1
கி.பா - 36 செவ் - 07 இல்
தகைமை - AL தொழில் - அரச சேவை
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகள் (1987 பின்பு தேவை).

பிறந்த திகதி - 1984.11.24 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - கேட்டை
கி.பா - 71 செவ் - 10 இல்
தகைமை - Bisness Management தொழில் - UK PR
எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகள் தேவை.

பிறந்த திகதி -1991.11.10 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - மூலம் 4
கி.பா - 20 செவ்/சூரி - 6 இல்
தகைமை - Network Engineer தொழில் - U.K. Company
எதிர்பார்ப்பு - Engineer மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1989.05.20 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - அனுசம்
கி.பா - 33 செவ் - 7 இல்
தகைமை - B.A.
தொழில் - அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1990.03.27 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் -உத்தரட்டாதி
கி.பா - 25 செவ் - 02 இல்
தகைமை - AL தொழில் - UK PR
எதிர்பார்ப்பு - படித்த மணமகள் 1991 பின்பு தேவை.

பிறந்த திகதி - 1972.03.17 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - உத்தரட்டாதி
கி.பா - 22 செவ்/சூரி - 08 இல்
தகைமை - AL
தொழில் - Company Work
எதிர்பார்ப்பு - AL படித்த மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1981.05.24 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - உத்தராடம் 2
கி.பா - 25 செவ் - 02 இல்
தகைமை - B.Sc
தொழில் - UK PR
எதிர்பார்ப்பு - UK or இலங்கை மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1989.04.13 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - புனர்பூசம் 3
கி.பா - 12 செவ் - 03 இல்
தகைமை - B.A
தொழில் - அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை மணமகள் தேவை.

### மணமகள் விவரம்

பிறந்த திகதி - 1994.04.23 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - பூசம் 4
கி.பா - 63 செவ் - 08 இல்
தகைமை - AL Banking தொழில் - Bank Officer
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன்.

பிறந்த திகதி - 1989.11.24 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - அத்தம் 5'
கி.பா - 26 செவ் - 10 இல்
தகைமை - M.B.A. தொழில் - Bank Officer
எதிர்பார்ப்பு - உள்நாடு Canada or UK மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1990.06.26 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - ஆயிலியம்
கி.பா - 47 சூரி/செவ் - 07 இல்
தகைமை - BA
தொழில் - அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1985.07.19 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - ஆயிலியம் 1
கி.பா - 59 செவ்/சூரி - 10 இல்
தகைமை - Bsc. M.sc தொழில் - Company
எதிர்பார்ப்பு - அரச சேவை Company பட்டதாரி மணமகன் .

பிறந்த திகதி - 1994.06.03 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - உத்தரட்டாதி 3
கி.பா - 1.6 செவ் - 09 இல்
தகைமை - B.sc
தொழில் - Company Colombo
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன்.

பிறந்த திகதி - 1995.08.10 மதம் - இந்து
ஜாதி - V சைவம் நட்சத்திரம் - திருகோணம்
கி.பா - 20 செவ் - 11 இல்
தகைமை - Electrical Engineer தொழில் - Company
எதிர்பார்ப்பு - Engineer... உள்நாடு வெளிநாடு தேவை.

பிறந்த திகதி - 1991.10.10 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - விசாகம் 1
செவ்- 02 இல் கி.பா - 11
தகைமை - I.T. M.sc
தொழில் -Accountant German PR
எதிர்பார்ப்பு - பட்டதாரி German மணமகன் (1988 பின்பு)

பிறந்த திகதி - 1989.11.29 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - கேட்டை 5'2"
கி.பா - 32 செவ் - 12 இல்
தகைமை - B.A தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன் தேவை

**ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.**

**காலைக்கதிர் தொலைபேசி
021 222 3000**

# மட்டக்களப்பு மண்டூரில் வெள்ளியிரவு ஆயுதக் குழு வீடு புகுந்து அட்டகாசம்!

மட்டக்களப்பு மண்டூர் பகுதியில் உள்ள வீடொன்றின் மீது ஆயுதங்களுடன் சென்ற குழுவினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு ஆயுதங்களுடன் சென்ற ஏழுக்கும் மேற்பட்டவர்கள் அந்த வீட்டின் மீது தாக்குதல் நத்தியுள்ளமையுடன், அங்கிருந்த இளைஞர் மற்றும் அவரின் கர்ப்பிணி மனைவி மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தாக்குதல் காரணமாக காயமடைந்த இளைஞர் களுவாஞ்சிகுடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மனைவி களுவாஞ்சிகுடி வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

ஆயுதக் குழுவினர் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த



மோட்டார் சைக்கிள்,சிறிய கன்டர் வாகனம் மற்றும் வீட்டில் இருந்த பொருள்களை உடைத்து சேதப்படுத்தி சென்றுள்ளனர் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து வெல்லாவெளி பொலிஸ் நிலையத்தில் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

## ஈழத்தமிழருக்கு ஆதரவாகவும்.....

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவருடன் பேசும்போது, அந்தச் செய்தியின் பின்னணி குறித்து விரிவாக எழுதுங்கள் என்று அன்றே அவரிடம் கேட்டிருந்தேன். அவர் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் மட்டுமல்ல, வடசென்னை தொகுதியிலிருந்து நாடாளுமன்றத்திற்கும் தெரிவானவர். அத்துடன் சில நூல்களையும் எழுதியவர்.

பாண்டியன் இலங்கை வந்திருந்த காலப்பகுதியில் இயங்கிய இடதுசாரிக்கட்சிகளின் பிரசுரங்கள், பத்திரிகைகளையும் ஒரு பொதியில் சேகரித்து வைத்துக்கொடுத்தேன்.

இனங்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பாக அச்சமயத்தில் இலங்கையில் இடது – வலது கம்யூனிஸ்ட் கட்சிகளும் சமசமாஜக்கட்சியும், விக்கிரமபாகுவின் நவசமசமாஜக்கட்சியும் ரோகண விஜேவீராவின் மக்கள் விடுதலை முன்னணியும் வேறுபட்ட கருத்தியல்களை கொண்டிருந்தன.

அக்கருத்தியல்கள் பதிவான ஏடுகளையே அவரது வாசிப்பிற்காக சேகரித்துக்கொடுத்திருந்தேன்.

அவர் அன்று கொழும்பில் நடந்த பாரதி நூற்றாண்டு மேடையில் சொன்னது பற்றி, பின்னாளில் 'பாரதியும் புரட்சி இயக்கமும்' என்ற தலைப்பில் தொடர் சொற்பொழிவு உரையை நிகழ்த்தி, அதனை தனி நூலாகவும் வெளியிட்ட பாரதி இயல் ஆய்வாளர் தொ.மு. சி. ரகுநாதனிடத்திலும் விசாரித்தேன்.

கலெக்டர் ஆஷ் கொலை பற்றி பல்வேறு செய்திகள் இருப்பதாகவே அவர் சொன்னார்.

தோழர் பாண்டியனை மீண்டும் 1984 ஆம் ஆண்டு சென்னை தி. நகரில் அமைந்த கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைக் காரியாலயமான பாலன் இல்லத்தில் சந்தித்தேன். அச்சமயம் அவரது கதை, வசனம், தயாரிப்பில் சங்கநாதம் என்ற திரைப்படம் வெளியாகியிருந்தது.

இத்திரைப்படத்தை ஜி. ராமிநீடு என்பவர் இயக்கியிருந்தார். நடிகர்கள் ராஜேஷ், ராஜலட்சுமி நடித்த படம். இதுதான் நடிகர் செந்திலுக்கும் முதலாவது திரைப்படம்.

தனியாருக்குச் சொந்தமான முகாமைத்துவ பாடசாலைகளில் நடைபெறும் மோசடிகளையும், அதற்கு எதிராக முற்போக்கு எண்ணம்கொண்ட இளம் ஆசிரியர் நடத்தும் தர்மயுத்தமும் பற்றிய கதை.

தோழர் பாண்டியன் இறுதிவரையில் எழுதிக்கொண்டிருந்தவர். அவர் இளம்வயதில் படிக்கின்ற காலத்திலேயே தோழர் ஜீவானந்தம் அவர்களின் கருத்துக்களினால் ஈர்க்கப்பட்டு பொதுவுடமைக் கொள்கை நிலைப்பாட்டினை எடுத்து, பின்னாளில் கம்யூனிஸ்ட்கட்சியின் முழுநேரத்தொண்டராகி, பல பதவிகளும் வகித்து, தலைவராக உயர்ந்தவர்.

கட்சிப்பணிகளுக்கு மத்தியிலும் வாசிப்பதிலும் எழுதுவதிலும் தனது கவனத்தை குவித்து வந்தவர். ஜீவானந்தம் பற்றியும் நூல் எழுதியிருக்கும் பாண்டியன் அவர்கள் கடந்த ஓராண்டு காலத்திற்கும் மேலாக உலகை அச்சுறுத்திவரும் கொரோனோ தொற்று நெருக்கடி குறித்தும், அண்மையில் 'கொரோனாவா முதலாளித்துவமா?' என்ற நூலையும் 'இந்தியாவில் மதங்கள், என்ற மற்றும் ஒரு நூலையும் எழுதி முடித்திருக்கிறார்.

சிறந்த மேடைப்பேச்சாளரான பாண்டியன் அங்கதச்சுவையுடனும் பேசவல்லவர்.

ஒரு தடவை இவரது கட்சி வேட்பாளர் நின்ற தொகுதியில் அவரை எதிர்த்து பிரசாரம் செய்வதற்காக அனைத்திந்திய அண்ணா தி. மு. க. சார்பில் ஜெயலலிதா சில கவர்ச்சி நடிகைகளை இறக்கியதை அறிந்த பாண்டியன், 'தம்மைப்போன்ற வயதால் மூத்தவர்களை அவமானப்படுத்தவேண்டும் என்பதற்காகவே அந்த நடிகைகளை அவர் மேடைகளில் இறக்கியிருக்கிறார்!' – என்று சொன்னார்.

இந்தியத் தொன்மங்கள் குறித்தும் பேசிவந்திருக்கும் பாண்டியன், கம்போடியாவின் அங்கோர்வாட்டின் சிறப்புக்குறித்து பேசியிருக்கும் காணொலிக்காட்சி ஆவணம் இலக்கியப் பயணிகளுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் உசாத்துணையாகும்.

முன்னாள் பாரதப் பிரதமர்கள் இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி ஆகியோர் தமிழகம் வந்து பேசும்வேளைகளில் அவர்களின் உரைகளை அழகிய தமிழில் மொழிபெயர்த்து பேசுபவராகவும் விளங்கியவர்தான் பாண்டியன்.

அவ்வாறு அவர் ராஜீவ் காந்தியுடன் கலந்துகொண்ட அந்தத் திருப்பெரும்புதூர் மேடைத்திடலில் பேசியதினத்தன்று விதிவசத்தால் தப்பினார்.

இலங்கையில் இனப்பிரச்சினை கூர்மையடைந்து, இனவிடுதலைப்போராட்டம் வெடித்த காலம் முதல் ஈழத்தின் நேசராகவே விளங்கிய தோழர் பாண்டியன், இறுதி யுத்தத்தின் பேரழிவுகளையடுத்தும் ஈழத் தமிழ் மக்களுக்காக இந்தியாவில் குரல் கொடுத்து வந்தார்.

அவரை ஐரோப்பிய நாடுகளில் வாழும் புலம்பெயர் ஈழத் தமிழர்களும் அழைத்து பேசவைத்திருக்கின்றனர்.

தமது 89 வயதில் மறைந்திருக்கும் தோழர் பாண்டியனுக்கு எமது இதய அஞ்சலி.

## திருக்குறள் ....

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருப்தி இல்லாமல் வெறுப்பு ஏற்படுகிறது. நிறைவு இல்லாமல் மகிழ்ச்சி குறைகிறது. மகிழ்ச்சி இல்லாததால் குரோரதம் உருவாகிறது. இது தனி மனிதனிடம் ஆரம்பித்து சமூக மயமாகி பெருவிருட்சமாகி வாழும் சமூகத்தில் ஏன் – உலக சமூகத்திலேயே அமைதியை குலைத்து விடுகிறது. இதனால் சமூக நல்லிணக்கம் என்பது காணாமலே போய்விடுகிறது. இந்த நிலையிலிருந்து சமூகம் விடுபட வேண்டுமென்றால் வள்ளுவம் காட்டும் இந்த வழியினை எடுத்துக் கொள்ளுதல் அவசியமாகும். 'வையத்திலே வாழ்வாங்கு வாழலாம் வாருங்கள்' என்று வள்ளுவம் யாவரையும் தன் பக்கம் அழைத்து நிற்கிறது.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்**

மனிதன் தன்னிடம் மறைந்துள்ள தேவ குணங்களைத் தேடிக் கண்டறிய வேண்டும். சொர்க்கமோ நரகமோ யாவுமே கண்டறியாத் தூரத்தில் இல்லை. யாவுமே மனத்திலேதான் ஒழிந்து இருக்கிறது. அதனைத் தேடிக் கண்டு பிடித்தால் இந்த உலகத்திலே சொர்க்கத்தையே கண்டுவிடலாம். மகிழ்ச்சிக்கோ திருப்தி இன்மைக்கோ அலைய வேண்டியதே இல்லை. அதற்காக அடுத்தவரையோ அடுத்த சமூகத்தையோ வெறுப்புடனும் ஆக்ரோஷத்துடனும் பார்க்க வேண்டிய அவசியமும் இல்லை. வானுலகையும் அங்கு வாழும் வாழ்வினையும் இந்த மண்ணுலகிலே கண்டு கொள்ளமுடியும் என்று வள்ளுவம் உறுதி மொழி பகர்ந்து நிற்கிறது அல்லவா? இந்த வழியில் வாழ எண்ணிவிடுவோம், ஆனால் அங்கு சமூக நல்லிணக்கம் வருவதில் தடைதான் உண்டோ? மனிதர்கள் அனைவரையும் தேவராக்கும் தத்துவத்தை இக்குறள் காட்டி நிற்கிறது. தேவரைத் தேடி அலையவே தேவையில்லை என்பதும் இத னூடாக புலப்பட்டு நிற்கிறதல்லவா? தேவ குணங்கள் மேலோங்கி விட்டால் அங்கு நல்லிணக்கத்துக்கு வழி பிறந்தாகி விட்டது என்றுதானே எண்ண வேண்டும்.

அன்பினை செலுத்துவதில் அக்கறை இல்லாமல் இருப்பதும் , பழி வாங்கும் எண்ணம் மேலோங்கி இருப்பதும், விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு அருகிக் காணப்படுவதும், நல்ல தலைமைகள் இல்லாமல் இருப்பதும், சமூக நல்லிணக்கம் ஏற்படுவதற்கு தடைக் கற்களாக இருக்கின்றன என்பதை மறந்து விடக்கூடாது. இதனை எல்லாம் தகர்த்து எறியும் பொழுதுதான் சமூக நல்லிணக்கம் ஏற்பட வழி பிறக்கும்.

அன்புடமை, இனியவை கூறல், நடுவு நிலைமை, அடக்கமுடைமை, பொறுமையுடைமை, அழுக்காறாமை, வெட்காமை, வெகுளாமை, வாய்மை, அறிவுடமை, கூடாவொழுக்கம், பண்புடமை, சான்றாண்மை என்றெல்லாம் வள்ளுவம் வகுத்து அதன் வழி நடந்தால் சமூகத்தில் நல்லிணக்கம் பிறக்கும் என்று சொல்லி நிற்கிறது.

சினத்தை தவிர்த்து, நன்னயம் ஓம்பி, அழுக்காற்றை, அவாவினை அகற்றி , அன்பினின் உயர்நிலையினை மனத்திருத்தி, மனத்திலே ஏற்படும் மாசுகளைத் தூக்கி எறிந்து, மனிதர்கள் வாழ்ந்தால் அந்த வாழ்வு சமூகத்தின் நல் வாழ்வுக்கு வழி சமைக்கும் என்று வள்ளுவம் நம்புகின்றது.

சமூக நல்லிணக்கம் என்பதை தேடி ஓட வேண்டியதில்லை. அதனை யாருமே கொண்டுவந்து தரப்போவதும் இல்லை. மனிதனால் உருவாக்கப்பட்ட சமூகத்தில் மனிதனாலேயே நல்லிணக்கம் ஏற்படுத்தப்படவேண்டும். அப்படி நல்லிணக்கத்தை ஏற்படுத்த திருக்குறள் என்னும் வழிகாட்டி வந்து நிற்கிறது. காலத்துக்கு ஒவ்வாதவற்றைக் காட்டாமல் காலத்துக்கு உகந்தவற்றைக் காட்டி , நடைமுறையில் கடைப்பிடிக்கும் சிந்தனைகளை முன்வைத்தும் நிற்கிறது. சமூக நல்லிணக்கம் இன்றியமையாமல் இருக்கும் இன்றைய காலகட்டத்தில் திருக்குறளின் வழிகாட்டல் என்பது மிகவும் முக்கியத்தும் உடையதாக விளங்குவதால் அதன் வழியில் சென்றால் சமூக நல்லிணக்கம் ஏற்படும் என்பதில் ஐயத்துக்கே இட மில்லை என்பதே என்னுடைய மனக்கிடக்கையாகும்.


# சொர்க்கம் திருமண சேவை

**மணமகன் விபரம்**

பிறந்த திகதி -1987.06.10 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - விசாகம் 4
தகைமை - Diploma in IT
தொழில் - Electrician Canada
எதிர்பார்ப்பு - இலங்கையில் படித்த பெண்.

பிறந்த திகதி - 1986.12.30 மதம் - இந்து
ஜாதி - கோவியர் நட்சத்திரம் - மூலம்
தொழில் - சொந்தத் தொழில் கனடாவில்
எதிர்பார்ப்பு - இலங்கையில் படித்த அழகிய பெண்.

பிறந்த திகதி - 1977.12.12 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் செவ் - 12 இல்
நட்சத்திரம் - மூலம்
தகைமை - Diploma in Public Administration
தொழில் - SLAS
எதிர்பார்ப்பு - படித்த அழகிய பெண்.

பிறந்த திகதி - 1983.10.29 மதம் - இந்து
ஜாதி - வாபர் செவ் - 8 இல்
நட்சத்திரம் - பூசம் 4ஆம் பாதம்
தொழில் - கனடாவில் சொந்தத் தொழில்
எதிர்பார்ப்பு - இலங்கையில் படித்த அழகிய பெண்.

**மணமகள் விபரம்**

பிறந்த திகதி - 1990.05.10 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் செவ் - லக்கினத்தில்
நட்சத்திரம் - விசாகம் 2ம் பாதம்
தகைமை - கல்வியற்கல்லூரி
தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம்.

பிறந்த திகதி - 1983.10.10 மதம் - இந்து
ஜாதி - வேளாளர்
நட்சத்திரம் - அனுஷம்
தகைமை - B.com, HNDA
தொழில் - Development Officer
எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம்.

பிறந்த திகதி - 1983.12.27 மதம் - இந்து
ஜாதி - கோவியர்
நட்சத்திரம் - அஸ்தம்
தகைமை - BA
தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம்.

பிறந்த திகதி - 1987.07.20 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் செவ்/சூ. -4 இல்
நட்சத்திரம் - பரணி கி.பா. - 46 3/4
தகைமை - Bsc, Msc
தொழில் - Development Officer
எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம் மற்றும் 4 இல் சூரிய செவ்வாய் இருத்தல்.

102/A பருத்தித்துறை வீதி,யாழ்ப்பாணம். www.sorkham.com
தொடர்புக்கு - 001416661855, 077 650 5097, 076 236 4188, 021 222 1515

காலைக்கதிர் Kalaikkathir

# திருமலையில் நகைகள் திருட்டு தொடர்புடைய ஏழு பேர் கைது!

பெப்ரவரி 08 ஆம் திகதி திருகோணமலையில் அமைந்துள்ள நகைக் கடையொன்றில் இடம்பெற்ற 38 லட்சம் ரூபா கொள்ளை சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் குறித்த தகவல்களை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

திருகோணமலை பகுதியில் அமைந்துள்ள தங்க நகை விற்பனை நிலையமொன்றில் கடந்த 8 ஆம் திகதி , 38 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதன்போது திருகோணமலை - கோணேஸ்வரம் கடற்பகுதியில் படகொன்றில் வந்துள்ள கொள்ளையர்கள், தங்க நகைகளை கொள்ளையிட்டு மீண்டும் படகிலேயே தப்பிச் சென்றுள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இந் நிலையில் தற்சமயம் இந்தச் சம்பவம் தொடர்பில் ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது திருகோணமலை பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபரொருவரே இந்த கொள்ளைத்திட்டத்தை திட்டமிட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. இவர் பல்வேறு குற்றச் செயற்பாடுகளுடன் தொடர்புகொண்டு தற்போது தலைமறைவாகியுள்ள 'ஐஸ் மஞ்சு' எனப்படும் சந்தேக நபரின் சகோதரர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து அவரை கைதுசெய்துள்ள பொலிஸார், அவரிடமிருந்து கைக்குண்டு ஒன்றும், வெளிநாட்டு துப்பாக்கி ஒன்றும் அதன் ஆறு தோட்டாக்களையும் கைப்பற்றியுள்ளனர். இதேவேளை , சந்தேக நபர்களால் தப்பிச் செல்வதற்காக பயன்படுத்தப்பட்ட படகின் உரிமையாளரை கைது செய்துள்ள பொலிஸார் , சந்தேகநபர்கள் பயன்படுத்திய படகையும் பறிமுதல் செய்துள்ளனர். இந்நிலையில், கொள்ளையிடப்பட்ட தங்கநகைகளை மீட்பதற்காக பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# உலகப் பொருளாதாரத்தில் இலங்கையின் வர்த்தகப் பங்கை அதிகரிக்க புதிய உத்தி

## தொழில்நுட்ப மாநாட்டில் ஜனாதிபதி



உலகப் பொருளாதாரத்தில் இலங்கையின் வர்த்தக பங்கை அதிகரிக்க உதவும் வகையில் ஒவ்வொரு துறையிலும் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்த அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தில் வாக்குறுதியளித்ததைப் போலவே, இந்த நோக்கத்துடன் ஒரு தனி தொழில்நுட்ப அமைச்சை அரசாங்கம் நிறுவியுள்ளது என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

விஞ்ஞான, தொழில்நுட்பத்திற்கான அணிசேரா நாடுகள் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுளின் 15 ஆவது ஆளுநர் சபை கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இதில் இணைய வழியூடாக உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

தொழில்நுட்ப அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் தேசிய விஞ்ஞான மற்றும் ஆராய்ச்சி ஆணைக்குழு ஏற்பாடு செய்த இந்த மாநாடு கொழும்பு மிலோதா நிதி கற்கைகள் நிறுவனத்தில் இடம்பெற்றது. இணையவழியூடாக 22 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்ட இவ்வருட மாநாட்டுக்கு இலங்கை தலைமை மற்றும் உபசரிப்பு பொறுப்பை வகிக்கின்றது.

தொழில்நுட்ப அடிப்படையிலான பொருளாதாரம் கொண்ட நாடாக மாற சுதேச தொழில்நுட்பம் நவீன தொழில்நுட்பத்துடன் ஒருங்கிணைக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி இதன் போது வலியுறுத்தினார். சூழல் நட்புடைய சுதேச மற்றும் பாரம்பரிய தொழில்நுட்பத்தின் பெருமைமிக்க வரலாறு எங்களிடம் உள்ளது. கொவிட் தொற்றுநோய் நிலைமைகள் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கும், ஆராய்ச்சியாளர்கள், விஞ்ஞானிகள் மற்றும் புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கும் சுகாதாரத் துறையில் உடனடி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான திறனை நிரூபிக்க ஒரு வாய்ப்பை வழங்கியுள்ளது என ஜனாதிபதி கூறினார்.

இந்த மாநாட்டில் மூன்று தசாப்தங்களின் எதிர்காலத் திட்டங்களைப் பற்றி விரிவாக ஆராயப்பட்டதுடன், உறுப்பு நாடுகளுக்கு இடையில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அறிவைப் பரிமாறிக்கொள்ளவும், அடுத்த பணியகக் கூட்டத்தை 2021 செப்ரெம்பரில் மொரீஷியஸில் நடத்தவும் இணக்கம் தெரிவிக்கப்பட்டது. உறுப்பு நாடுகளுக்கு இடையே பரிமாறிக்கொள்ளப்பட்ட அறிவின் அடிப்படையில் எழுதப்பட்ட ஐந்து புத்தகங்களும் வெளியிட்டு வைக்கப்பட்டன.

# 4 மணித்தியால சுற்றிவளைப்பு; 3,871 சந்தேக நபர்கள் கைது!

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட நான்கு மணித்தியால விசேட சுற்றிவளைப்பின்போது பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்ட 3,871 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

பொலிஸ்மா அதிபர் சீ.டீ.விக்ரமரத்னவின் ஆலோசனைக்கமைய, கடந்த வியாழக்கிழமை மாலை 6 மணிமுதல் இரவு 10 மணி வரை விசேட சுற்றிவளைப்பு இடம்பெற்றது. இதன் போது பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த 1,430 சந்தேக நபர்களும், பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் தேடப்பட்டு வந்த 562 பேரும், ஹெரோயின், கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களை வைத்திருந்தமை தொடர்பில் 552 பேரும், சட்டவிரோத மதுபானத்தை வைத்திருந்தமை தொடர்பில் 556 பேரும், சட்டவிரோத துப்பாக்கிகளை வைத்திருந்ததாக 16 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்திய 607 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய 146 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். கவனமின்றி வாகனம் செலுத்திய 126 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவற்றைத்தவிர வாகனம் சார்ந்த வேறுவகையான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் 6,047 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இச்சுற்றிவளைப்பின் போது, பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் 3,871 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். நாட்டு மக்கள் சமாதானத்துடன் எந்தவித அச்சமுமின்றி வாழ்வதற்கான நோக்கத்தில் முன்னெடுக்கப்பட்ட இந்த சுற்றிவளைப்பை, தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அதற்கமைய எமது இந்த நடவடிக்கைகளுக்கு அனைவரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றார்.




## பத்துக் கட்சிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்றைய கூட்டத்தில் –


"எந்தப் புதுக்கூட்டும் – தேர்தல் அணியும் உருவாக்குவது இல்லை. பொது விடயங்களில் தேவை கருதி தமிழர் தரப்புகளுடன் இணைந்து செயற்படலாம். அது, அந்தந்த விடயங்களுக்கு – தேவைகளுக்கு – ஏற்ப அமைய வேண்டுமே தவிர, பொதுக் கூட்டு, புதுக் கட்டமைப்பு என்ற அடிப்படையில் அல்ல" – என்ற சாரப்பட உறுப்பினர்கள் பலரும் தெரிவித்த கருத்துகள் எதிர்ப்புகள், ஆட்சேபனைகள் ஏதுமின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இதனால், பத்துக் கட்சிகள் மற்றும் தரப்புகளைச் சேர்த்துக்கொண்டு புதுக்கூட்டு ஒன்றை அமைக்கும் மாவை சேனாதிராசா தரப்பினரின் எத்தனத்துக்கு மத்திய குழுவில் அங்கீகாரம் கிடைக்காமல் தடைப்பட்டுப்போனது.

இந்தக் கூட்டத்தின் பின்னர் நேற்று ஊடகவியலாளர்களுக்கு தமிழரசுப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்த கருத்துகளும் இதனை ஊர்ஜிதப்படுத்தின.

"ஒற்றுமையான முன்னெடுப்பு என்பது அரசியல் கூட்டோ, தேர்தல் கூட்டோ அல்ல. தமிழர்களிற்கு எதிரான பொது விடயங்களில் அனைத்து தரப்புகளும் தமிழர் தரப்பாக ஒன்று சேர வேண்டிய தேவை இருக்கிறது. தமிழ் மக்கள் மத்தியிலே இது தொடர்பான எதிர்பார்ப்புக்களும் இருக்கின்றன. அதைச் செய்வோம். எனவே அரசியல் தலைமைத்துவம் கொடுக்க வேண்டியது எங்களது பொறுப்பு. அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதை அரசியலுக்காகச் செய்கிறோம் என்று சொன்னால் அதனை ஏற்கமுடியாது." என்றார் சுமந்திரன்.

இதன்போது ஊடகவியலாளர் ஒருவர் "தமிழ் மக்கள் பேரவை இருக்கும் போது தமிழ் தேசிய பேரவையின் உருவாக்கம் குறித்து ஏன் பேசுகிறீர்கள்?" எனக் கேள்வி எழுப்பிய போது, "தமிழ் மக்கள் பேரவை என்ற ஒன்று இப்போது இருப்பதாக எனக்கு தெரியாது" என்று மட்டும் அவர் பதிலளித்தார்.



# அரசுக்கு எதிராக ஒன்றுபட்டு போராட்டம்

## ஐக்கிய மக்கள் சக்தி முஸ்தீபு; ரணிலுக்கும் அழைப்பு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் ஜனநாயக விரோத செயல்களைக் கண்டித்தும், நீதிக்காகவும் அறவழியில் போராட்டங்களை நடத்தவும், சவால்களை சட்டரீதியாக எதிர்கொள்வதற்குமான வியூகத்தை ஐக்கிய மக்கள் சக்தி வகுத்துவருகின்றது. இது தொடர்பில் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகளுடன் அது சந்திப்புகளை நடத்திவருகின்றது.

அனைத்து சக்திகளையும் ஓரணியில் திரட்டி, அரசுக்கு அழுத்தம் கொடுத்து, அரசாங்கத்தால் எடுக்கப்பட்டுள்ள சிற்சில முடிவுகளை மீளப்பெற வைப்பதே இதன் நோக்கம் என்று கூறப்படுகின்றது.

இந்நிலையில் இதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவும் கோரப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் சிலர் ரணிலை நேரில் சந்தித்து இது பற்றி கலந்துரையாடியுள்ளனர் என அறியமுடிகின்றது.

ரணிலுக்கு அனைத்துலக மட்டத்தில் தொடர்புகள் உள்ளன, சட்டரீதியிலான அனுபவமும் உள்ளது. இதற்கு புறம்பாக ராஜபக்ஷக்களுடனும் நல்லுறவு இருக்கின்றது. எனவேதான் ரணிலுக்கு தூது அனுப்பப்பட்டுள்ளது எனவும் தெரியவருகின்றது.

அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவில் ரணில் விக்கிரமசிங்கவின் பெயரும் உள்ளதாக கூறப்படுகின்றது. எனவே, அரசின் நோக்கத்தை தோற்கடிக்க ரணிலும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதற்கு பச்சைக்கொடி காட்டியுள்ளாராம் என்று கூறப்பட்டது.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
05.05.1931

மறைவு
10.03.2020

அமரர்

## திருமதி நடராசா இலட்சுமி

(மொந்திபுலம், காரைநகர்)

திதி பிரதமை 28.02.2021

ஆண்டு ஒன்று ஆனபோதும் ஆறவில்லை எம் துயரம் அம்மா கண்மணி போல எம்மைக் கண்கலங்காமல் காத்தீர்கள் அம்மா உங்கள் நினைவுகள் எம் உணர்வோடு வாழ்கின்றது அம்மா விழிப்பிலும் கனவிலும் உங்கள் இன்முகம் என்றும் நீங்காது அம்மா இறைவன் சந்நிதியில் எமக்காக என்றும் வேண்டுங்கள் அம்மா உங்கள் ஆன்மா இறைவன் சந்நிதியில் அமைதி காண இறைவனை இறைஞ்சி வேண்டுகின்றோம்.

சிங்கப்பூர் ஜ்வெல்லறி,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

# விழிநீர் அஞ்சலி



## அமரர் குருநாதன் பிரபாகரன் (பிரபா)

வணிகமானி (சிறப்பு)
1982 - 1986 யாழ். பல்கலைக்கழகம்

நெஞ்சில் வலியுடனும்
நீங்காத நினைவுகளோடும்
நண்பர்கள் நாம் கதறுகின்றோம்
நண்பா! நீ மடிந்து போகவில்லை
எங்கள் இதயங்களில் படிந்து போயிருக்கின்றாய்...!
நண்பா ! நீ எங்கும் தூரம் போகவில்லை
எங்கள் நினைவுகளில் என்றும் இருக்கின்றாய்...!
என்றாவது ஒருநாள் எங்கோ ஓரிடத்தில்
நாம் சந்தித்துக் கொள்வோம்....!
நம் நட்புக்கு என்றும் மரணமில்லை ...!

ஆருயிர் கணவரின் பிரிவால் ஆறாத் துயருற்றிருக்கும் அன்னாரின் அன்பு மனைவிக்கும் தங்கள் அன்பிற்கும் அரவணைப்பிற்குமுரிய தந்தையின் எதிர்பாராத இழப்பினால் கவலையுற்றிருக்கும் அன்னாரின் பாசமிகு பிள்ளைகளுக்கும் ஆழ்ந்த தாங்கொணா மன வேதனையுடன் அன்பு மகனை பறிகொடுத்து தவிக்கும் அன்னாரின் அன்புத் தாயாருக்கும் மற்றும் குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குழுமமானது ஆத்மார்த்தமான இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கலையாத நினைவுகளுடன் உதிரும் கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சித்து உள்ளமதால் வேண்டி நிற்கிறது.

வணிக, முகாமைத்துவ, கலைப் பட்டதாரிகள்
1982 - 1986
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.02.2021 இல் வெளியிடப்பெற்றது.